# வணக்கம்

மாதாந்த சஞ்சிகை

இதழ்: 02 ஏப்ரல் 2011 விலை: ரூபா 50.00



புகைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள்.....



மாணவ மணிகளும் செல்போன் மணிகளும்



சரித்திர நாவல்களின் இன்றைய நிலை



கல்வி கற்றலில்


## தன்னம்பிக்கை

என்பது முக்கியமான விடயம்

பல்கலைக்கழக மாணவர்களின் வெளியீடு


# முதல் 'வணக்கம்' வெளியீடு











# வணக்கம்

மாதாந்த சஞ்சிகை

## வணக்கம் குழு


| | |
|---|---|
| நிர்வாக ஆசிரியர் | : ரிஷி |
| ஆசிரியர் | : வர்ணன் |
| உதவி ஆசிரியர் குழு | : வினோத்<br>நிதர்ஷன்<br>சுரேஷ்<br>ஹரிசன்<br>கஜந்தன்<br>துஷ்மன்<br>ராஜ்குமார் |
| சந்தைப்படுத்தல் | : செந்தூரன்<br>இளமாறன் |
| இணைப்பாளர்கள் | : கஸ்தூரி<br>மதிராஜ்<br>சாரங்கன்<br>சஞ்சி<br>சிவநேசன்<br>குஜிந்தினி |



| | |
|---|---|
| புதிப்புரிமை | : வணக்கம் |
| அலுவலக முகவரி | : 1048, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் |
| தொலைபேசி | : 021-7200684 |
| மின்னஞ்சல் முகவரி | : Vanakkamnet@gmail.com |
| சந்தைப்படுத்தல் | : 0772342075 |
| பக்க வடிவமைப்பு | : Innovay |
| அச்சகம் | : Unie Arts (PVT) Ltd. |


## உள்ளே




09 சரித்திர நாவல்களின் இன்றைய நிலை






12 உங்களால் அனுப்பப்படும் மின்னஞ்சல் வாசிக்கப்பட்டதா இல்லையா என்று அறிவது எப்படி ?





17 மாணவ மணிகளும் செல்போன் மணிகளும்





20 கற்பில்லாப் பெண்ணினம்......





21 புகைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள்.....

24 கல்வி கற்றலில் தன்னம்பிக்கை என்பது முக்கியமான விடயம்





40 மட்டக்களப்பு

வளாகத்திலிருந்து வணக்கம்,

# " படிப்பமடா தம்பி..... "

அகரம் இட்ட வேளையில் திலகமிட்ட என் தாய் துயரம் துடைக்க இன்றும் எமக்கு கல்வி எஞ்சியிருக்கிறதே என்று நான் கூறும்போது தாயின் முகம் தந்த உதட்டோரப் புன்னகை எம் முதல் வணக்கம் அவள் இதயத்தையும் சென்றடைந்திருப்பதை உணரக்கூடியதாய் இருந்தது.

கல்வி அதுதானேயடா தம்பி எம் சொத்து பெரும்போகமோ, சிறுபோகமோ, மாரியோ, கோடையோ எதிலும் நாம் இறுக்கப் பிடித்து உழுததால் அயலவனும் அண்ணார்ந்து பார்க்கும் வகையில் அமோக விளைச்சல் தந்த அருமையான சொத்தல்லவோ அது ஊக்கமாய்ப் படியடா தம்பி சுற்றம் உன்பட்டம் பறப்பதற்காய் உயிர்பிடித்து ஊதிய தென்றலை உதறிதள்ளும் ஓட்டைப் பட்டமாகிவிடாதே. எம் நாட்டின் வீட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கைகளில் வீட்டின் பட்டினியும் படுகடனும் உனக்காகக் காத்திருப்பதையும் உணர்ந்துகொள். எத்துணை துயர் வரினும் படி அதுவே எம் சுகவாழ்வின் முதல்படி.

இது வளமான எதிர்காலத்திற்காக நீ வாழ வேண்டிய காலம் அத்தனை சுகங்களும் உன் அருகே வந்து முத்தம் கொடுக்கும் ஆனால் அந்த சுகங்கள் நாடி எம் சொந்தமுகம் இழந்து கல்வி தொலைப்போமா? முடிவெடுக்க வேண்டிய தருணம் இது பள்ளிக்கூடம் செல்லாமல் விட்டுவிட்டு கோழிமுட்டை அடைகாத்துப் பின் மின்குமிழைக்கண்டு பிடிக்க இது ஒன்றும் தோமஸ் அல்வா எடிசன் காலமல்ல தம்பி, இயல் இசை நாடகம் புரியக் கூட பட்டம் கேட்கும் சான்றிதழ் விசுவாச காலம் இது.

அப்பன், பூட்டன்மார் சேர்த்து வைத்த சொத்து இருந்தால் பரவாயில்லை, சாதாரண தரத்து ஐந்து சித்திகளுடன் ரஷ்யா பக்கமோ அமெரிக்காவுக்கோ போய் வைத்தியராக பொறியியலாளராக ஆகலாம். இல்லாவிட்டால் உள்நாட்டில் நடக்கும் வெளியூர்ப் பாடநெறிகளுக்கு பல லட்சங்கள் கொடுத்து பம்மாத்துக் காட்டலாம் ஆனால் ஆறாம் வகுப்பில் ஆசிரியரின் வற்புறுத்தலில் வங்கியிலிட்ட நூறு ரூபாய் மட்டுமே இன்னும் வங்கி நிலுவையாக உள்ள செல்வந்தர்களுக்கு பட்டம் பெற இருக்கும் ஒரே வழி நம்ம ஊர் பல்கலைக்கழகங்கள் தானே! அங்கே அடிபுடி நடந்தாலும் நமக்கென்ன வென்று ஒதுங்கியிருந்து நாலு விஷயம், நாலு பேர், நாலு பாஷை தெரிந்துகொண்டு ஊருக்கு ராஜாவாக திரும்பி வந்து இறங்கலாம்தானே.

தம்பி நாம் விழுந்த பள்ளத்திலிருந்து வெளியேறி வர வீட்டுக்கு ஒருவராவது பட்டதாரியாக வேண்டும். ஒவ்வொரு பட்டதாரியும் தம் குடும்பத்தை தம் ஊரினை எம் சமூகத்தைச் செழிக்கவைக்கும் தன்னலமற்ற உணர்வோடு செயற்படுவோம்.

"நாளைய உலகம் நமது கையில், நம் சமூகம் நம் சிரத்தில்"

ஆசிரியர்

# பழமொழிகள் படும் பாடு

பழமொழிகள் பழைய மொழிகள் மட்டுமல்ல, தொன்றுதொட்டு வரும் அனுபவக் கருத்துக் களுமாகும். ஒரு மரத்தின் பழம் என்ன செயலைச் செய்யுமோ? அது போல புதிய வித்தாகிய எண்ணக்கருவைத் தந்து அந்த வித்திலிருந்து நற்பண்பாட்டுடன் கூடிய செயல் என்னும் மரத்தையும் தருவதால் "பழம்" போன்ற மொழிகள் பழ மொழிகள் என்றாகின்றன.

அத்தகைய பழமொழிகளின் இன்றைய நிலை என்ன? ஒன்று கிடக்க ஒன்று விளைவது போல பழமொழிகள் சரியான பொருள் தெரியாமல் வேறொன்றாக வழங்கிவருவது, மட்டுமல்ல விபரீதமாகவும் பொருள் சொல்லப்படுகிறது. இதனால் மனக்கவலையுடன் பொருட்செலவுகளும் ஏற்படுகின்றன.

பழமொழிகளுக்கு நேரான ஒரு அர்த்தம் சொல்லளவில் உண்டு. இதை விட மறை முகமான ஆழமான சுவையான வெறுபொருளும் அதனுள் பொதிந்து கிடக்கும். இந்த ஆழமான பொருளே பழமொழிகளுக்கு சுவையையும் உயர்வையும் தருவதாகும். இந்தப்பொருள் புதியமல் பயன்படுத்துவதால் சொல்லத் தெரியாமல் சொல்லி வருவதனால் பழமொழிகள் படும் படு பலவிதமாகும் அவ்வாறான சில பழமொழிகள் படும் பட்டை பார்க்கலாம்.

**"அறப்படிச்ச மூஞ்சுறு கூழ்ப்பானைக்குள் வீழ்ந்தது"**

இந்தப் பழமொழிக்கு பொதுவாக வழங்கி வரும் அர்த்தம், "நல்லப்படித்த ஒருவர் நிலை தவறி வீழ்ந்து விட்டார்" என்பதாகும். ஆனால் உண்மையில் இந்த பழமொழி மேற்சொன்ன கருத்தை விளக்க எழுந்ததல்ல. அது வேறொன்றைக் குறிக்க எழுந்ததாகும். ஒரு பழ மொழிக்கு நேர்ச் சொல் வாக்கிய கருத்து இருக்க வேண்டும். அது பொருளுள்ளதாக இருக்க வேண்டும் முன்பு பார்த்தோமல்லவா? ஆவ்வாறு நோக்கின் மூஞ்சுறுவுக்கும் படிப்பிற்கும் என்ன சம்பந்தம் மூஞ்சுறு எங்கேயாவது அறப்படிக்குமா? கிடையாது. கூழ்ப் பானைக்குள் விழலாம் ஆனால் அறப்படிக்காது அப்படியானல் எங்கே தவறு? சோல்லிச் சொல்லிப் பொருள் தெரியாமல் ஒலியளவில் தவறி விட்டது? ஆவ்வாறாயின் இதன் சரியன வடிவந்தான் என்ன?

அறுவடிச்ச முன் சோறு கழு நீர்ப்பானைக்குள் விழும். எனபதே சரியான சரியன வடிவம் அது மட்டுமின்றி சரியான நேர்ச் சொல் பொருளும் கொண்டது. சோற்றினை சமைத்து கஞ்சி வடிக்கும் போது சோத்துப்பானையைச் சரித்து ஒட்ட வடிக்கையில் பானையில் இருந்து கஞ்சி கழு நீர்ப்பானைக்குள் வடியும் போது பானையில் மேலிருக்கும் முன்னுக்கு இருக்கும் சோறும் அதனுடன் சேர்ந்து பானையோ? சட்டியோ? அதற்குள் விழும். அதுவே இப்பழமொழியின் நேர்-பொருளும் பொருத்தமான பொருளாகும். சரி அப்படியாயின் இதன் மறைமுகமான ஆழமான பொருள் என்ன? எந்த ஒரு விடயத்திலும் ஈடுபடுபவர்களில் முன்னுக்கு நின்று பாடு படுபவர்களுக்கே முதன் ஆளாக நின்று கறியமாற்றுபவர்களுக்கே திறமையோ நன்மையோ எதுவும் ஏற்படும். பின் வரிசையில் நிற்பவர்களுக்கல்ல. உதாரணத்திற்கு ஒரு ஊர்வலம் வருகிறது என்று வைத்துக் கொண்டால் அந்த ஊர்வலத்தை வரவேற்று மாலை சூட்டினாலும் முன் வரிசையில் நிற்கும் ஆளுக்கே மாலை மரியாதை கிடைக்கும். பின்னுக்கு நிற்பவர்களுக்கல்ல. இதே போல ஊர்வலத்தை கலைக்க அடிவிழுகிறது என்று வைத்துக கொள்வோம். அதில் அடிவாங்குவோர் முன் வரிசையில் நிற்பவரே பின் வரிசையில் நிற்பவருக்கு அடியும் விழாது தப்பியும் ஓடி விடுவார். நன்மையோ தீமையோ எதுவும் பானையில் முன்னுக்கு இருக்கும் சோற்றினைப் போல் முன் வரிசையில் இருக்கும் ஆளுக்கே நடக்கும்.

**ஒரு மரத்தின் பழம் என்ன செயலைச் செய்யுமோ? அது போல புதிய வித்தாகிய எண்ணக்கருவைத் தந்து அந்த வித்திலிருந்து நற்பண்பாட்டுடன் கூடிய செயல் என்னும் மரத்தையும் தருவதால் 'பழம்' போன்ற மொழிகள் பழ மொழிகள் என்றாகின்றன.**

இதை விளக்கவே "அறவடிச்ச முன் சோறு கழு நீர்ப்பானைக்குள் விழும்" என்ற பழ மொழி எழுந்தது. ஆனால் அது காலம் மாறக் கோலமும் மாறி இன்று இப்படி நிற்கிறது. அறவடிச்சது (அறப்படிச்சதாகி) முன் சோறு (மூஞ்சுறு ஆகி) கழு நீர்ப்பானை (கூழ்ப் பானையாகிப்) போனது. இந்தப் பழ மொழி பட்டிருக்கும் பாட்டைப் பார்த்தீர்கள் அல்லவா?

**" சனிப் பிணம் தனிப் போகாது "**

இந்தப் பழ மொழியால் சாவு வீடுகளில் நடக்கும் மனக்கஷ்டம் பொருட் செலவு சொல்லும் தரமற்று இன்று நடமுறையில் ஒருவர் இறந்தால் அவர் அதாவது அந்தப் பிணம் தனிய சுடலைக்கு போகாது, அது அந்த வீட்டில் இன்னொரு உயிரையும் கூடவே அழைத்துச் சென்று விடும் என்பதாகும். இதனால் சனிக்கிழமையில் ஒருவர் இறந்து விட்டால் அந்த வீட்டினர், இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் பயந்து நடுங்குவார்கள். தங்களில் ஒருவரின் உயிரையும் எடுக்கப் போகிறதே என்று அஞ்சுவார்கள். இதிலிருந்து தப்ப ஒரு வழியும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். சனிப்பிணம் தனிய போகாமல் கூடவே ஒரு உயிரையும் அழைத்துச் செல்வதற்காக, பிணம் சுடலைக்கு போகும் போது ஒரு கோழி(பொதுவாக விடலைச் சேவல்) யையோ அல்லது ஒரு தென்னம் பிள்ளையையோ சேர்த்து பிணத்தோடு அனுப்புகின்றார்கள், பிணத்தையும் கொண்டு போன உயிரையும் சுடலையில் போட்டு அவசர அவசரமாக பிணத்திற்கு கொள்ளி வைத்து விட்டு திரும்பியும் பார்க்காமல் வந்து விடுகின்றார்கள். இதுதான் வழமையாக நடந்து வருகிறது. ஆனால் எவனாவது ஒரு "அறிவாளி" பிணத்தோடு கொண்டு போய் சுடலையில் விட்ட சேவலுக்கு அல்லது ஆட்டுக்குட்டிக்கு (சில வீடுகளில் ஆட்டுக்குட்டியையும் சேர்த்தனுப்புவது உண்டு) என்ன நடந்தது? என்று எட்டிப் பார்த்திருக்கின்றானா? இல்லவே இல்லை. அதுகள் "ஜாலியாக" சுடலையில் சுற்றிக்கொண்டிருக்கும். யாராவது ஊன் விருப்பி கண்டு அதை உள்ளே தள்ளாமல் இருக்கும் மட்டும் மற்றப்படி பிரதான பிணம் இந்த உயிர்களை எடுத்ததாத சான்றேயில்லை.

அப்படியாயின் "சனிப் பிணம் தனிப் போகாது" என்பதன் சரியான அர்த்தம்தான் என்ன? ஒரு கிழமையில் ஏழுநாட்களும் ஏழு கிரகங்களின் ஆட்சி உண்டு. அது அந்தந்த கிழமை ஏழுநாட்களில் பூமியையும் பூமியில் உள்ள மனிதர்களை தாக்கும். சனிக் கிழமைகளில் சனிக் கிரகத்தின் தாக்காததால் மனித உடல்களில் வெப்பநிலை வெப்பம் அதிகமாக இருக்கும். இதனாலேயே சனிக்கிழமைகளில் எண்ணை தேய்த்து சூடு போக ஆற அமர முழுகுதல் ஒரு கட்டாய வழக்கமாகியது. அதில் ஆழமான உண்மையும் அர்த்தமும் உண்டு. நீராடும் என்ற தொடரும் அதனாலயே ஏற்பட்டது. இது மனித உடலில் சனிக் கிழமைகளில் வெப்பம், சூடு வழமையை விட அதிகமாக இருப்பதை குறிக்கின்றது. இந்த நிலையில் சனிக் கிழமைகளில் இறந்த ஒருவருடைய உடம்புக்கும் பொருந்தும் அதாவது ஒருவர் சனிக் கிழமைகளில் இறந்து விட்டால் அந்த பிணத்தின் சூடு ஆறாது. விரைவில் ஆறாது. பிணத்தின் சூடு ஆற அதிக நேரம் எடுக்கும்.

இறந்த ஒருவரின் உடம்பின் சூடு முற்றாக ஆறிய பின்னரே அந்த உடம்புக்கு மரணக் கிரியை தொடங்க வேண்டும். இறந்த உடம்பு கருதப்பட்டது. இதனாலேயே சனிக்கிழமைகளில்இதனாலேயே சூடு ஆறாமல் இருப்பின் மீண்டும் "உயிர் பெற" வாய்ப்புண்டு. ஆகையல் பிணத்துக்கு கிரியை செய்ய அதன் சூடு, "தன்னிப்பு" ஆக வெண்டும். அதுவரையும் காத்திருக்க வேண்டும். அது பொதுவாக சிலமணி நேரத்தில் நடந்து விடும். ஆனால் சனிக்கிழமையில் அதிக நேரம் எடுக்கும். கெதியா "தனிப்பு ஆகாது". அதனால் "சனிப்பிணம் தணிப்பு ஆகாது" என்று சொல்லப்பட்டு வரலாயிற்று. அந்த நாட்களில் இது சரியாகவே வழங்கி வந்தது. ஆனால் நாட் செல்ல செல்ல இறந்த உடம்புக்கு கிரியை செய்ய ஆரம்பிக்கும்.

காலமும் நாட்கணக்கில் தள்ளிப்போக, இந்த பழமொழியின் அவசியமும், பொருளும் புரியாமல் வெறும் வர்த்தையளவில் சொல்லத்தொடங்க, .ஒலிமாற்றம் அமைந்து

**எழுதியவன் எட்டை கெடுத்தான்,**
**பாடியவன் பாட்டைக்கெடுத்தன்,**
**சொன்னவன் பழமொழியைக் கெடுத்தான்**

இன்று வழங்கிவரும் இந்த நிலைக்கு இந்த பழமொழி கெட்டு விட்டது. "சனிப்பிணம் தனிப்பு ஆகாது"? என்று கடகட என்று கொஞ்ச நேரம் சொல்லி பாருங்கள், எப்படிவரும்? தெரியுமா?, "சனிப் பிணம் தனிப் போகாது" என்று வந்து விடும். இது தான் இன்றைய நிலை. எழுதியவன் எட்டை கெடுத்தான், பாடியவன் பாட்டைக்கெடுத்தன், சொன்னவன் பழமொழியைக் கெடுத்தான், என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா? ஏன் இந்தப்பழமொழிக்கு இந்த நிலை ஏற்பட்டது என்றால் இவை தோன்றிய போது சரியன அர்த்தத்துடன் சரியன வழியில் புழங்கி வந்தன. நாட்செல்ல இவ் பழமொழிக்குரிய கிரியைகள், சடங்குகள் கைவிடப்பட்டுப் போக,வெறும் வார்த்தையளவில் வழங்கி வந்த இந்த பழமொழிகளுக்கு இடைக்காலத்தில் கிரியைகளில் "தலைப்பாகை" கட்டும் பெரிசுகள் அல்லது "இளவட்டங்கள்" சொல்லத்தெரியாமல் சொல்லி, அத்துடன் விடாமல் அதுக்கு ஒரு புது கிரியையும் உருவாக்கி விட்டன. அப்படி உருவனதே, சனிக்கிழமையில் செத்த பிணத்துடன், கோழிக்குஞ்சு அனுப்பும் வழக்கமும் ஆகும். இது இன்னும் ஒருபடி மேலே போய் வெள்ளிக்கிழமையில் செத்து சனிக்கிழமையில் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பிரேதத்துக்கும் கூட இதே விதியை வைத்து "கூடவே ஒரு உயிரையும்" அனுப்பத்தொடங்கினார்கள். ஏனெனில் இருப்பவர்களுக்கு தங்கள் உயிர் மீது அவ்வளவு பற்று என்ன அறிவீனம்? இவ்வாறு பழ மொழிகள் படும் பாடு கொஞ்சமா? நஞ்சமா? இவ்வாறு இன்னும் பல உள்ளன.

"தமிழருவி" த. சிவகுமாரன்

சிந்தனைத் துளி

நல்ல மனிதன் என்பவன் யார்?
ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது,
சிறந்த அல்லது உயர்ந்த செயல்களை
எவன் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறானோ அவன்தான்.

- புளுடார்க்

# கடவுள்

கடவுளை பிடிக்கும் எனக்கு... இல்லாததால்!! ஒரு வேளை இருந்திருந்தால் பிடிக்காமல் போயிருக்கும்!" இப்பிடியெல்லாம் (கன்னி "வணக்கத்தில்") எழுதியிருந்ததால் 'பனையூரானை' ப் பிடிக்கும் அவனுக்கு. கமல்ஹாசனிடம் கலையைக் காட்டிலும் கருத்தால் அதிகமாகக் கவரப்பட்டவன். நம் கையில் உள்ள வாழ்க்கையை கடவுளிடம் கொடுக்கும் காரியம் கூடாது என்பவன். கிடைத்த வாழ்க்கையையும் எம்மையும் நம்ப வேண்டும் என்பவன்.
இங்கனம் பிரமாதமாக அணிந்துரை கொண்டவன்..... சுதர்சன்! பதின்மப் பருவத்தினை ஒரு வருட அதிகரிப்பில் தொலைத்திருந்தான். மொறட்டுவை பல்கலைக்கழக அரிதான விடுமுறைக் காலமொன்றை யாழ்ப்பாணத்தில் தன் வீட்டில் கரைத்துக் கொண்டிருந்தான்.
இன்று இவன் நித்திரை எங்கோ நித்திரையாகி விட்டது போலும். எவ்வளவு அழைத்தும் அது வந்தபாடாக இல்லை!! துக்கம் வராது புரளும் அவன் வெறித்துக் கொண்டிருந்த விட்டத்தில் விரிந்த காட்சிதான் என்ன?? நாளைக்கு முருகத்தி கோயில்ல கொடியேத்தம்.பெரிய குஞ்சியப்பு வீட்டு பூசை! அவையளுக்கு நேர்த் துடக்கு....
அவனுடைய அம்மா குஞ்சியப்பு வீட்டிலிருந்து வந்த முதல் நிமிஷமே ஆரம்பித்த சம்பாஷணையின் சூட்சுமத்தை எளிதில் ஊகித்து, அதை துளிரிலே கொய்ய எத்தனித்த சுதர்சனின் முயற்சி முறியடிக்கப்பட்டது..
சுதர்சனுடைய சாம, தான, பேத, தண்ட நடவடிக்கைகள் மற்றும் சிணுங்கல்கள் உட்பட எதுவுமே எடுபடவில்லை. நாளைக்கு போறாய். இதுக்கே இப்பிடி எண்டா நாளைக்கு கலியாணக் கதை எப்பிடியோ தெரியேல்ல....... தன் தூரதரிசன சாதுரியத்தையும் மகன் மீதான நம்பிக்கையையும் அப்பட்டமாக வெளிப்படுத்தினார் அப்பா. "சும்மா வெருளாம நாளைக்கு போராய்......" என்ற "கோரஸ்" குரல்களோடு கத்தித் தோற்றான்.
அவ்வளவுதான்....... அதுவே முடிவாகி விட்டது.
கோயில் சம்பிரதாயங்களும் வேலைகளும் அவ்வளவாகப் பரிச்சயமில்லை என்பதால் பயந்தான் என்பதோடு தர்ப்பையை சாமிக்கும் சாத்தலாம் என்ற "ஒப்சனை" யும் நடந்திருந்த விவாதத்தின் போது தவற விட்டிருந்தான்.

உண்மையில் பெரிய குஞ்சியப்பு சொன்ன "சாமிக்குச் சாத்திடுவமே?" என்னும் முன்மொழிவு "பிள்ளையள் போட்டா நல்லதுதானே.."
என்ற அம்மாவின் ஆசையால் முடக்கப் பட்டிருந்ததால் மேற்கண்டிருந்த "ஒப்சன் பொயிண்டு" ம் புஸ்வானமாகியிருக்கலாம்.




Normal Heb Smith Ministries

இரவு கோயிலில் கொடியேற்ற ஆயத்த வேலைகள் முடித்து வந்து படுத்தவனை கண்ணயர விடவில்லை "கடவுள்"!!! அந்த வார்த்தை, அவன் வாழ்க்கையில் நெடிய பயணமொன்று கண்டிருந்தது. கடந்த பன்னிரண்டு வருடங்களாக "கடவுள்" என்கிற வார்த்தை அவனுள் ஏற்படுத்தும் விம்பங்கள் நிறம் மாறிக்கொண்டிருக்கின்றன.
கடந்திருந்த காலம் வயதோடு வழங்கியிருந்த அறிவு... எதிராளியையும் செவிமடுக்கும் "நெகிழும் கருத்துக் கொள்கையால்" அவன் பரிணாமம் பரந்து கிடந்தது. மூளையின் சேகரிப்புடன்
முருகனுக்குத்தானே கேக்கிறம்..அவன் பாத்துக் கொள்ளுவான்தானே குடுங்களென்...... கோவில் "பொடியள் செற்" தலைவருக்கும் வீட்டம்மாளுக்கும் கொஞ்சம் காரசாரமாகவே கதை வலுக்க ஆரம்பித்தது. எங்களை அழைத்து வந்த வீட்டு ஐயா "கம" மென்று வான் பார்த்து நின்றிருந்தார்.
இது சுதர்சனுக்கு அதாவது ஒரு "பக்கா" பகுத்தறிவுவாதிக்கு அர்த்தமற்றதாகவும் சுவாரசிய-மாகவும் இருந்தது.

தூர தேசங்களில் ஆர்ப்பாட்ட வாழ்க்கை, சொந்த ஊரில் "அமைதியான" பொடியன் என்ற "கம்பஸ்" மாணவ கலாசாரத்துக்கு பங்கம் விளைவிப்பதில்லை அவன். அங்கும் அதையே "மெயின்டெயின்" பண்ணினான் அமைதி காத்தான். "சாஸ்திர சம்பிரதாயங்கள் நல்லாத்தான் சமூகத்தை திறப்படுத்துது." உதட்டுக்குள் உச்சரித்து சிரித்தான். இங்கே தோற்றாலும் வேறொரு வீட்டிலிருந்து வாழை கொணர்ந்து ஜெயித்திருந்தார்கள்தான். ஆனால் அந்த "மறுத்த" வீட்டிலிருந்து யாராவது கோயிலுக்கு இனி வருவார்களா??? மாட்டார்களா?? இந்தக் கேள்விக்கு பதில் துலங்க முன்பே தூங்கிப்போனான் சுதர்சன்.

***************************

மறு நாட் காலை... பறவைகளோடு "பரலலாக" எழுந்தான். ஆறு அரைக்கெல்லாம் பாலும் தயிரும் பிற பொருட்களும் இடம் மாற்றப்பட்டன. எட்டு மணி கடந்த பின்னர் சொன்னபடி ஏழு மணிக்கே பூசை ஆரம்பித்தது. "ஏழு எண்டாத்தான் எட்டு மணிக்காவது சனம் வரும்!!" புதிய "பாணி" ஒன்றை பிறப்பித்தார்கள்.. அந்த "எட்டு" கூடிய சீக்கிரமே

வளர்ந்து இன்னுமும் நேரம் விழுங்க ஆயத்தமாக இருப்பது புரிந்தது.
பெரியவர்களும் சிறியவர்களுமாய் ஏழு பிராமணர்கள்!! வந்திருந்தவர்கள் வெகு சிலரே. "பக்திக் கோலத்தில்" ஒரு பத்து பெண்களும் ஒரு கை விரலுக்கும் குறைவான எண்ணிக்கையில் வயதான ஆண்களும் பிறர் சமுகமளிக்க இன்னும் நேரமிருந்தது. சடங்குகளில் சுதர்சன் தடுமாறிக் கொண்டிருந்தான். அவனுக்கு எந்த உணர்ச்சியும் பொங்கிப் பிரவாகிக்கவில்லை.
ஒல்லியாய் இருக்கும் பாவத்துக்கு காத்திருக்கும் என்னப்பா இளைச்சிட்டே? "பாசங்களுக்கான" "உயரமா இருக்கிறதால அப்பிடித் தெரியுது போலங்க" என்று அவனது அசட்டுச் சமாளிப்புக்கள்.

ஆண்கள் மேலாடைகளைந்து திறந்து நிற்பது கருங்கல்லில் தெறிக்கும் சமஸ்கிரத சுலோக அதிர்வு......"வைப்ரேசன்"........மின்காந்த அலை உடலுக்கு நல்லதாம். இப்படியாக சகல சடங்குகளுக்கும் 'விஞ்ஞான விளக்கக்' காரணங்கள் இப்போதெல்லாம் கொஞ்சம் பிரசித்தம். நாங்களும் அனைத்து அறிவியலையும் ஆதி காலத்திலேயே அறிவோம் என்ற வாதங்களும் உண்டு.
ஆனால் சுதர்சனின் கருத்துக்கள் வேறுபட்டவை..
"கிரகம், கோள் சஞ்சாரம் எல்லாம் எங்கட மூதாதையருக்கு முதலே தெரியும்.........விஞ்ஞானம் எல்லாம் எங்களுக்கு ஜிஜீபி....என்டெல்லாம் 'நாங்களும் ரவுடிதான்' ரேஞ்சில எனி சொல்லி ஒண்டும் ஆகப் போறேல்ல....இத்தனை படி ஏறின விஞ்ஞானமே இப்ப பெருகின சனத்தையும் அவையிண்ட தேவைகளையும் சமாளிக்க முடியாம திணறுது.. கண்டு பிடிச்சு வளர்த்தவங்கள் அவங்கள்!! ஆளுறாங்கள்...நம்மட ஆக்கள் எவ்வளவு காசு கட்டி அங்கெல்லாம் போறம்...அங்க என்ன தொழில் செய்யிறம்...:..எல்லாம் தெரியும்தானே...."

அவனுக்கு பக்தி பெருகவில்லை. மாறாக "இந்த '.'பங்சன்' சிறப்பா நடந்தாச் சரிதான்!" மனோபாவம்தான் ஊறியது. இதோ இந்த மண்டபத்தில் அவன் அமைதியாய்த் தியானித்த நாட்கள்!!! யாருமற்ற வேளைகளில் கோயிலுக்கு வருவதுதான் அவன் வழமை. அமைதி!! ஆல் சலசலக்கும் காற்றின் தண்மை!! வெளியேறும் போது முகத்தில் தெரியும் அந்த தேஜஸ்...மன அடக்கமும் ஒருமைப்பாடும்..... அந்த சுகானுபவம் சொல்லி மாளாது. இழந்து விட்டானோ???? உண்மையில் அந்த திறமைகள் இன்று அவனிடத்தில் அருகித்தான் போயிருந்தன.

பத்து மணி தாண்டி நுழைந்த நண்பர் குழாமின் அணிவகுப்புடன்தான் சுதர்சனுடைய சுவாசம் சீரானது. மேளச் சப்தம் கேட்கிறது...கூடவே நாதஸ்வரமும்........ அருகிவிட்ட கலைகள்... சின்ன வயதில் எப்போதோ மேளச் சமா நேரத்தில் தத்தித் தத்தி ஆடித் திரிந்தது அவனுக்கு மங்கலாக ஞாபகம் வந்தது. இப்போதெல்லாம் அக்கம் பக்கத்தில் கூட அந்த அனுபவம் யாருக்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை. உண்மையிலேயே இழக்கிறோம் கோயில் அந்த வகையில் நல்லதோ?? வசந்த மண்டபப் பூசையோடு சாமி காவி தோளில் இறக்கியதும் அவனுடைய கொள்கைகளும் பாரமாய்ச் சேர்ந்து அழுத்தின. மயிலாசனத்தில் முருகனை அடியார்களோடு சுதர்சனும் கொம்பு கொண்டு சுமந்து நிற்க கொடிமரப்பூசை ஆரம்பித்தது. பாலும் தயிரும் பஞ்சாமிர்தமமும் கொடி-மரம் தொட்டிறங்கிய போது இவனுக்கு நா உலர்ந்தது. "மனிசன் வாழ்க்கை மேம்பாடா இருக்கோணும் எண்டு உண்டான கடவுள்" காப்பாத்தி வச்சிருக்க எத்தனை எத்தனை சடங்குகள்!!!"
உயரமாய் இருந்த ஒரே காரணத்துக்காய் முன்னால் நின்று கொம்பு பிடிக்க விட்டிருந்தார்கள். தேகம் திணற ஆரம்பித்தது... கனத்து கண் இருட்டலாகி..... அவன் வீம்பு தோற்று விடும் கணம்.... "தம்பி! விடய்யா..." சுதர்சனின் பின்னால் கரகரத்த குரலுடன் மெல்லிய ஸ்பரிசம். உணர்ச்சி குறைந்து விட்டிருந்தது அவனுக்கு.... ஒரு சின்ன உருவம் மெதுவாக காவாங்கை நகர்த்தி கொம்பைத் தாங்கியது.




நன்றி பனித்த சுதர்சனின் கண்களூடு தெரிந்த நபர்.... அவர் தெரிந்த நபரும் கூட... "அட....கடம்பண்ணை!!" என்றவன் மூச்சு வாங்கினான். ஆயாசத்தை குறைத்து மெல்லச் சிரித்தான். அவர் கடம்பு அண்ணை..... பாவம்! அவர் முதுகில் பிறப்பிலிருந்தே திமிலுடன் கூடிய கூன். செவிப்புலனும் அவ்வளவு சரியில்லை.....

அவரும் அவனுடைய பரந்த ஊரில் ஏதோ ஒரு கண்டறியப்படாத வீட்டில் இருப்பவர். வருடத்தில் அவர் வெளியே தெரிவது

கொடியேறிய பதினொரு தினங்களும்தான். பின் கோடைகாலத்து அட்டைகள் போல் மாயமாகி விடுவார் மனிதர். அவரைப் பார்க்கும் போதுதான் ஒரு விசயம் புரிகிறது.
எமது உடலில் எத்தனை பாகங்கள் இயங்குகின்றன என்பதை அவ்வப்போது நாம் மறந்து விடத்தான் செய்கிறோம்.
சுதர்சனுக்கு அவரைப் பார்க்கும் போதே ஏதோ ஒன்று உறைக்க ஆரம்பித்தது. அவன் சின்ன வயதில் கோயிலில் அவரை "பொடியன்கள்" சேட்டை செய்வதைக் கண்டு நொந்திருக்கிறான். சின்ன உதவிகள் செய்திருக்கிறான். கொஞ்ச வருடங்கள் ஓடி விட்டன... அவருக்கு சுதர்சனைத் தெரியாது. தெரிந்ததெல்லாம் முருகன் மட்டுமே. வருசா வருசம் கொடியேறியதும் வருவார் ஒரு குழந்தைச் சிரிப்பு வழிய ஓடி ஓடி தீவட்டி பிடிப்பார்.



"எல்லாத்தையும் வச்சுக் கொண்டு நாங்கள் ஆயிரம் கதைப்பம்! இந்தக் கடம்பண்ணைக்கு இப்பிடியானவைக்கு வாழ்க்கையில... நம்பிக்கை......... வளர்ந்தவுடன நிறைய மறந்திற்றம்!! கடவுள் இருந்தாலும் இல்லாடியும்தான் என்ன?? கடவுள் எனக்கு உதவி செய்தவர்தானே... எனக்கு மட்டுமில்ல"
சுதர்சன் அதிரடியான பல மாறுதல்களை அனுபவித்தான். தலைக்குள் பிரசவித்த சுனாமி வேக சிந்தனைகள் அவனை உலுக்க ஆரம்பித்தன. கடம்பண்ணை முருகனையே பார்த்து உருகிக் கொண்டிருந்தார். ஒரு வேளை அது அடுத்த பிறப்பு குறித்த வேண்டுகோளேதுமோ?? சுதர்சன் மயிலிருந்த முருகனை ஏறிட்டான்.
"நல்லது கெட்டது எல்லாத்தையும் வாங்கிட்டு நீ பேசாம நிக்கிறாய்... எத்தனை பேருக்கு நீ வாழ்க்கை குடுக்கிறாய்... நம்பிக்கை...உன்னக் குறை சொல்றத்துக்கு எதுவுமே இல்லையே....
உன்னை வச்சு மனிசன்தான் தப்புச் செய்றான்......உனக்கு நல்லது மட்டும் தான் தெரியும். நீயும் ஒரு விதத்தில பாவம்தான்...... நீ வாழ வேண்டி இருக்கு இன்னும்ம்.....மனிசங்களுக்காக......அவங்கள் வேண்டாம் எண்டு சொல்லும் வரைக்குமாவது.......ஏனெண்டா.....
அவன் சிந்தித்த வண்ணம் புதிதாய் தெரிந்த சூழலைக் கவனித்தான்.

".......எல்லாம் இயங்கிற எங்களுக்கே வாழ்க்கையில. எம்மில நம்பிக்கை வைக்கிறது கஷ்டம்......அதை விட கரைச்சல் மற்றவைக்கு நம்பிக்கை ஊட்டிறது....அதுவும் ஏலாதவைக்கு....... எங்களால முடியாத சிலது உன்னால முடியுது கடவுளே...."
மயிலிருந்த முருகனை முழுதாய்க் காண கடம்பண்ணை தொலைவில் நிற்கிறார். நிமிர முடியாத, ஏற்றக் கோணம் குறைந்த அவர் அதைப் போக்க வேண்டி தூர நகர்ந்தாலும் வேண்டுதலால் அண்மிக்க முயல்கிறார். உயர்ந்து நிமிர்ந்த இவன் மிக மிக அருகில் நின்று முருகனைத் தாண்டியும் காட்சிகள் காண்கிறான்....... மாறுபட்ட இருவர் ஒரு புள்ளியில் இணைந்த கோலம் இது!!!
இந்தக் கோலம் குறித்த சிந்தனை எதை அவனுக்கு உணர்த்தியதோ....... அவன் முகம் ஒளிர ஆரம்பித்தது! உபயகார பிரதிநிதி சுதர்சன் தேங்காய் உடைக்க கொடி ஏறியது..
மறுபடி தோளில் தூக்கையில் " அரோ கரா!!" ஒலியில் அவன் பங்கும் இருந்தது!! இம்முறை பாரம் வெகுவாகக் குறைந்திருந்தது.
"நிறைய பாரங்களை உன்னால குறைக்க முடியும்...... .எங்களால முடியாத சிலது நாங்க உருவாக்கின உன்னால முடியும்!!!"

"அரோஓஓ....... கராஆஆ........ !!!!!"
இம்முறை இந்த ஒலி கோயிலையும் தாண்டி வான்வெளி எங்கும் நிறைவதாகப்பட்டது அவனுக்கு.

- திலகன் -



# சரித்திர நாவல்களின் இன்றைய நிலை

பல்லவர், சோழர் காலம் முதற்கொண்டு மொகலாயர் ஆங்கிலேயர் முதலான அந்நியப்படையெடுப்புக்கள் வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற பல தனிமனித சகாசங்களும் சாம்ராச்சியங்களில் மாற்றங்களும் பல சரித்திர நாவல்களாக வந்துள்ளன ஒரு சரித்திர நாவலை எழுதுவதென்பது இலேசுப்பட்ட விடயமல்ல ஏற்கனவே வரலாற்றில் நடந்து முடிந்த சந்தர்ப்பங்களால் இடையிடையே சுவாரசியமான திருப்பங்களை ஏற்படுத்துகின்ற அல்லது வாசகன் ஏற்றுக்கொள்ளும் விதம் முடிவுகளை மாற்றுகின்ற உரிமை எழுத்தாளனுக்கு இல்லை பல வரலாற்று ஆதாரங்கள், ஆராய்ச்சிக்கு குறிப்புக்கள் முதலானவற்றை கோர்வையாக்கி அவற்றை இரசனை குன்றாமல் சிறந்த நாவலாகத் தரும்போது ஏற்படும் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கும் பதிலளிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். வரலாற்றைத் திசைதிருப்பாத வண்ணம் கற்பனைப் பாத்திரங்களைப் புகுத்தல், சிறந்த வர்ணனைகள் தலங்களும் அவை தொடர்பான சமய கருத்துக்களையும் தருதல், இடையிடையே உடலுறவு முதலான பாலியல் கவர்ச்சிகளை இழையோடவிடல் முதலான யுத்திகளை வாசகர்களை கவரும் பொருட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்துகிறார்கள். பல புகழ்பெற்ற எழுத்தாளர்களும் சரித்திர நாவல் எழுதும் முயற்சியில் தோல்வியடைந்துள்ளனர். இதில் என்ன பிரச்சனை என்றால் ஒருவர் மூலப்பொருளாக எடுக்கும் சரித்திர நிகழ்வு மீண்டும் ஒரு முறை முயற்சி செய்ய அல்லது வேறொரு கோணத்தில் அணுக பிற எழுத்தாளர்கள் விரும்புவதில்லை இதனால் நாவல் வெற்றியோ தோல்வியோ அந்நிகழ்வு அத்துடன் கைவிடப்படுகின்றது.

ஆனால் சரித்திர நாவல்கள் மக்களிடையே ஏற்படுத்திய தாக்கம் அளப்பெரியது. அதுவும் ஆங்கிலேயருக்கு எதிரான போரட்டங்களின்போது கடாரம் வென்ற சோழர்களின் வீர தீர பராக்கிரமங்களும் வடக்கே இமையம் முதலா் தெற்கே இலங்கை வரை புலிக்கொடி (சோழர்களுடையது) பரந்த கதைகளும் மக்களிடையே இன உணர்வுகளையும் வீரத்தினையும் ஏற்படுத்த தவறவில்லை.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியானது சரித்திர நாவல்களின் பொற்காலம் ஆகும். இக் காலப்பகுதியில் பல சரித்திர நாவல்கள் வாரா வாரம் உயிரோட்டமாக மிகச் சிறந்த ஓவியங்களுடன் தொடர்கதைகளாக சஞ்சிகைகளில் வந்தன. அவற்றை வசிப்பதற்காக வாசகர்கள் கடை வாசல்களிலும் வாசிகசாலைகளிலும் தவம் கிடந்தனர். இவ்விடத்தில் சரித்திர நாவல்களில் தனக்கென சரித்திரம் படைத் அமரர் கல்கி (ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி) அவர்களைப் பற்றி குறிப்பிடாவிட்டால் வரலாறு என்னை மன்னிக்காது. கொஞ்சம் ராஜாகுமாரிகளையும் மயக்கும் சுந்தரவள்ளிகளையும் நம்பி நாவல்கள் எழுதியோர் மத்தியில் கல்கி பெரிதும் வித்தியாசமானவர். தமிழ் நடை, காட்சிகளை கண் முன்னே கொணரும். உயிர்ரோட்டமான வர்ணனைகள், திட்டமிடப்பட்ட

உறுத்தான கற்பனைப் பாத்திரங்கள் மயிர் கூச வைக்கும் வேவு முறை என அவருக்கு நிகர் அவரே.

தமிழர்களைப் பொறுத்தவரை சரித்திர சான்றுகள் ஒழுங்கான முறையில் போணப்படாததொடு தொன்மையை அழிக்கவும் உண்மையை மறைக்கவும் பல வரலாற்று சுவடுகள் அழிக்கப்பட்டன அல்லது வேறு இனத்தின் உடமையாக்கப்பட்டன. இந்நிலையில் உண்மையான வரலாற்றை அறிந்து கொள்ள இச் சரித்திர நாவல்கள் பெரிதும் உதவும் இருந்தும் இன்று இந் நாவல்கள் இலக்கிய வாதிகள் மாத்திரமே வாசிப்பதாகிவிட்டன. வாசித்த நாவல்களை சிலாகித்து கதைப்பதற்கு ஆட்கள் இல்லை. வேகமாக வாழ்க்கை ஓட்டம் காரணமாக எதிர்காலம், நிகழ்காலம் பற்றி சிந்திக்கும் மனிதன் இறந்த காலத்தை வெறும் சுமையாகவே கருதுகின்றான். கற்பனை பாத்திரங்களால் நாவல்களின் நம்பகத்தன்மை குறைகின்றமை, பெரிய அளவில், அதிக விலை என்பனவும் நாவல்கள் சுகமாக முடிந்தால்கூட வாசித்தபின் ஏற்படுகின்ற இனம்புரியாத கவலை இனி எப்போதும் இதுபோன்று நடக்காதே என்ற ஏக்கம் சரித்திர நாவல்கள் மீதான ஆர்வத்தன்மை குறைகின்றன. இருந்தும் இத்தகைய பெரிய நாவல்களை இணையத்தின் ஊடாக நேரடியாகவோ அல்லது தரவிற்கு இறக்கம் செய்து வாசிக்கவோ வசதி செய்தவர்கள் வாழ்க. இன்று பலராலும் விவாதிக்கப்படும் விடயம்




"பொன்னியின் செல்வன்" நாவல் திரைப்படமாவது குறித்துத்தான் இம்முயற்சி பல திரை நட்சத்திரங்களுக்கு இலட்சிய கனவாக இருந்தது.

ஆனால நாவலன நீளம், சம அளவு முக்கியத்துவம் உடைய பல பாத்திரங்களுக்கான நடிகர்களின் தெரிவு, புழுதி பறக்க பாய்ந்துவரும் லட்சக்கணக்கான சைன்னியங்கள் 10ம் நூற்றாண்டுக் காலப்பகுதியிலான சூழலை உருவாக்குதல் என்பவற்றில் உள்ள சிரமங்களால் கடைசி வரை கனவாகவே இருந்தது. எதற்கும் ஆரம்பம் வேண்டும் அந்த வகையில் இந்த முயற்சி வரவேற்கத்தக்கது. எனவே கதை, முடிவு ஆகியன தெரியுமாதலால் காட்சி அமைப்பே முக்கியத்துவம் பெறுகின்றது. வாசகர்களின் கற்பனையில் இருந்து திரையில் சற்று குறைவு ஏற்படினும் படம் தோல்வியே பெரும்பாலானவர்கள் இத் திரைப்படத்தின் மூலமே சோழர்களையும், வரலாற்று உண்மைகளையும் முதல் முதலாக உள்வாங்க போகின்றார்கள். எனவே சிறுபிழை ஏற்படினும் அது மன்னிக்க முடியாத குற்றமாவதோடு பல விமர்சனங்களுக்கும் உள்ளாகும். அந்த வகையில் இயக்குனர், நடிகர்கள், கலைஇயக்குனர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர், ஒளிப்பதிவாளர், உடைவடிவமைப்பாளர் என சகலருக்கும் பல சவால் காத்திருக்கின்றது. இம் முயற்சிகள் தொடரும் பட்சத்தில் திரைப்படத்திற்காகவாவது சரித்திர நாவல்களை வாசிப்பார்கள். (பிற மொழி திரைக் களைஞர்களின் கதிதான் அதோ கதி)

சிவகுமாரன் ஜனகன்
பொறியியல் பீடம்
மொறட்டுவ பல்கலைக்கழகம்.

# வாழ்வியலின் மெய்யியல்



இந்துமதம் காலத்தால் முற்பட்டது. எம்மதத்தில் அன்று கூறப்பட்ட பல கருத்துகளும், நடைமுறையிலுள்ள பல சடங்குகளிற்கும் விஞ்ஞான ரீதியான அடிப்படை இருப்பது என்பது. பல அறிஞர்களின் வாதம் இவற்றிலிருந்து இந்துமதம் ஒரு அறிவியல் வளர்ச்சியுடன் கூடிய மதம் என்பது உறுதியாகின்றது. குறிப்பாக எமது இந்து மதத்தில் நடைமுறையிலுள்ள தீமிதித்தல் (Fire Walk) தூக்குக்காவடி, செடில்காவடி (Hook Swing) என்பனவற்றின் விஞ்ஞானவியல் அடிப்படை பற்றியதே இக்கட்டுரையாகும்.

மனிதனால் உணரப்படும் நோ (Pain) எனப்படுவது மனிதப்புலன் அங்கங்களினால் உணரப்படும் இயல்புநிலையை மாற்றுகின்ற மன எழுச்சியுடன் கூடிய ஒரு தூண்டலுக்குரிய துலங்கலாகும். இவ் நோவினை ஒருவர் உணரும் வெளிப்படுத்தும் தன்மை அவரிற்கே தனித்துவமானது. அதாவது நபருக்கு நபர் வேறுபடும், அத்துடன் நோவை உணர்வதிற்கான அடிப்படை உளவியல் ஆளுமைகளாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

20ம் நூற்றாண்டளவில் விஞ்ஞானிகளின் பல ஆய்வுகளிலிருந்து வெளிப்படுவது நோ, குளிர், வெப்பம் போன்ற புலன் உணர்வுகள் உயர் உளவியல் ஆளுமைகளால் (Hasher fumitory) ஆளப்படுகின்றன. அதாவது புலன் அங்கங்களினால் உணரப்பட்ட (Receptors) ஊடாக மூளைய மேற்படைவிற்கு (Sensory Cord) கொண்டு செல்லப்பட்டு அங்கு உணரப்படுகின்றது. இவ்வாறு கொண்டு செல்லப்படும் இடை நேரத்தில் மூளையின் அடி (Brain Stem) எனும் இடத்தில் இக் கணத்தாக்கங்கள் மாறுதலிற்கு உட்படுத்தலாம். அதாவது மிகப்பலமான ஒரு உளவியல் பின்னணி இருக்குமிடத்தில் மூளையின் உயர் தொழில்நுட்ப அலகினால் (Limbic System) பிறப்பிக்கப்படும் எதிர்த்திசையிலான கணத்தாக்கங்கள் மூளையின் அடிப்பகுதியில் நரம்பு இரசாயனப் பதார்த்தங்கள் (Neurotronymitlers) மூலம் செயற்பட்டு நோ எனும் உணர்வை அமைப்பழிவடையச் செய்வதுடன் மேற்பட்டை உணரும் தகவைக் குறைக்கின்றது. இதனால் வெளிப்படுத்தும் தன்மையும் குறைக்கப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட சந்தர்ப்பத்திற்கு அமைப்பொத்த நிகழ்வே எம்மதத்திலும் இடம்பெறுகின்றது. அதாவது கடவுளின் மீது நாம் கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஏற்படுத்திய நேத்தியானது எமது உயிரைப் பணயம் வைக்கும் அளவிற்கு எம்மை இட்டுச்செல்கின்றது. இதனால் ஏற்படுத்தப்படும் எதிர் விசை உயர் உளவியல் தூண்டல் தீமிதித்தலின் போது உணரப்படும் வெப்ப உணர்ச்சியையும் காவடிகளின்போது ஏற்படுத்தப்படும் நோவுணர்வையும் உணரக்கூடிய அளவிற்கு எம்மை இட்டுச்செல்வதில்லை.

இவற்றிற்கு ஏனைய உதாரணங்களாக விளையாட்டில் ஈடுபடும் ஒரு விளையாட்டு வீரன்களத்தில் ஏற்படும் காயங்கள், நோக்களைப் பொருட்படுத்தாமல் விளையாட்டு முடியும்வரை விளையாடுகின்றான்.

யுத்தமுனையில் போராளிகள் தம் மீது ஏற்படுத்தப்பட்ட காயங்கள், நோ போன்றவற்றை பொருட்படுத்தாமல் செயற்பட்டு முடிவின்போதே சிறிதளவு உணர்வைப் பெறுகின்றார்கள்.

இவற்றை விட நாம் ஓடும் பயிற்சியின்போது (jogging) பெறுமனே ஓடாமல் பாட்டினை செவிமடுத்து பயிற்சிசெய்யின் நீண்ட நேரம் எம்மால் செய்றபடமுடியும்.

ஒத்த நிகழ்வாக

ஒலிம்பிக் சாதனைகளின்போது சுழியோடிகள் கடலின் அடியில் 1000 அடிவரைசென்று 10 நிமிடம் வரை எதுவிதகவசமும் அணியாமல் இருக்க இதே போன்ற புத்தியை உபயோகிக்கின்றனர். அதாவது அங்குசென்று புலனுணர்வை மாற்ற கைவினைச் செயற்பாடுகளில் (Fine Activities) ஈடுபட்டுகின்றனர். இதன் மூலம் ஒருபுலனை இன்னொன்றாக மாற்றி தம் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

ஒட்டுமொத்தமாக நோக்கில் உயர் உளவியல் ஆளுமைகளின் மூலம் எத்தனை சவால்களையும் சமாளிக்கக்கூடிய விஞ்ஞானவியல் அடிப்படையை எம்மதம் அன்றிலிருந்தே எமக்குப் புகட்டுவதற்கு இச்சமயச் சடங்குகள் மூலம் வழிசமைத்துள்ள தென்றால் அது மிகையாகாது.

Raguraj
Faculty of medicine
University of Peradeniya

# உங்களால் அனுப்பப்படும் மின்னஞ்சல் வாசிக்கப்பட்டதா இல்லையா என்றுஅறிவது எப்படி?

## Find out if your email has been read!

நீங்கள் கண்காணிப்பது பெறுனருக்கு தெரியாமலிருக்க, வெள்ளை நிறத்திலுள்ள Box ஐ தெரிவு செய்து நீங்கள் அனுப்பும் மின்னஞ்சலில் ஏதாவது ஓரிடத்தில் paste செய்யவும்.

தள முகவரி:
www.spypig.com

P. Joy Nitharsanan
joyhhh1989@gmail.com

சில சந்தர்ப்பங்களில் நாம் அனுப்பிய மின்னஞ்சல் திறந்து படிக்கப்பட்டதா அல்லது படிக்கப்படவில்லையா என்று அறிய வேண்டிய அவசியத்தில் இருப்போம். அவ்வாறு அறிவதற்கு உதவுவது தான் SpyPig என்ற இந்த இணையத்தளம். இது ஒரு இலவச சேவையாகும். இதன் மூலம் நாம் அனுப்பும் மின்னஞ்சலை எந்த நாட்டில் இருந்து எத்தனை மணிக்குப் படிக்கிறார், எத்தனை தரம் படிக்கிறார். அவர் மின்னஞ்சலை படிக்கும் கணணியின் ip Address போன்ற தகவல்களை இந்த இணையத்தளம் உடனுக்குடன் எமக்குத் தெரியப்படுத்தும். இத் தளத்தில் செயன்முறைகள் அனைத்தும் படிமுறைப்படி இலகுவாக விளக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது மின்னஞ்சலை எழுதி முடிந்தவுடன் இந்த இணையத்தளத்துக்கு சென்று உங்கள் மின்னஞ்சல் முகவரியையும் உங்கள் மின்னஞ்சலுக்கான தலைப்பையும் (subject) கொடுக்க வேண்டும்.

பின்னர் Select your SpyPig tracking image என்ற இடத்தில் உள்ள எதாவது ஒரு படத்தினை தெரிவு செய்யவும்.

பின் கீழ் உள்ள click to create my spypig என்ற Button ஐக் click செய்யவும். அப்போது கீழ் உள்ள Box ல் நீங்கள் தெரிவு செய்த படம் தோன்றும். அப் படத்தினை ஒரு நிமிடத்துக்குள் Copy செய்து நீங்கள் அனுப்பும் மின்னஞ்சலில் ஏதாவது ஒரு இடத்தில் paste செய்து அந்த மின்னஞ்சலை சாதாரண மின்னஞ்சல் போல் அனுப்பவும். அந்த மின்னஞ்சல் திறந்து படிக்கும் போது உங்களுக்கு தகவல் அனுப்பப்படும்.



## புதிர் கணக்கு

*29524 kg நிறையுடைய இரும்பைப் பயன்படுத்தி தட்டுத் தராசுக்கான 10 படிகள் உருவாக்கப்பட்டன. இப்பத்து படிகளையும் பயன்படுத்தி 29524 kg வரையான எந்த ஒரு முழு எண் நிறையையும் நிறுக்க முடியும் . 10 படிகளின் நிறைகளையும் குறிப்பிடுக ?*

*சரியான விடையளிக்கும் அதிஸ்டசாலி Rs.2000 பணப்பரிசை பெற்றுக்கொள்ளலாம்.*
*நீங்கள் சரியான விடையை உங்கள் தொடர்புடன் அனுப்பவேண்டியது*

*email.nesasiva@gmail.com*
*0776679391*
*or*
*S.SIVANESAN.*
*Faculty of Applied Science,*
*Vavuniya Campus,*
*Kurumankadu ,*
*Vavuniya.*

# இன்றைய இளம் சமூகத்தின் கவனத்திற்கு



கலியுகத்தில் வாழ்ந்துவரும் இளம் சமூகம் நாளைய உலகில் நல்வழியில் வாழ்வதற்கு சில சிந்தனைகள். அன்றைய கால புராணங்களும் இதிகாசங்களும் எமக்கு பல வழிகளில் நல்வழிப்படுத்துகின்றன. அன்றைய சமூகம் வேறு இன்றைய சமூகம் வேறு.

அன்றைய புராணங்கள் கூறுகின்றன இரண்டு உலகங்கள் உள்ளதாக. ஒன்று தேவலோகம் அடுத்தது அசுரலோகம். தேவ உலகத்தில் வாழ்ந்தவர்கள் எல்லோருமே நல்லவர்களாகவே வாழ்ந்தார்கள். அசுர உலகத்தில் வாழ்ந்தவர் தீயவர்களாகவே வாழ்ந்தார்கள் ஆகவே இந்த உலகத்தில் வாழ்பவருக்கு ஒரு பிரச்சினையும் இருந்ததில்லை. தேவர்களும் அசுரர்களும் மட்டுமே மோதிக்கொண்டனர். நல்லவர்கள் நல்லவர்களாகவே வாழ்ந்தார்கள். தீயவர்கள் தீயவர்களாகவே வாழ்ந்தார்கள்.

அடுத்து வந்தது இராமாயணம் இதில் இரண்டு பிரதேசங்களுக்கிடையே மட்டும் பிரச்சனை ஏற்பட்டது. இராமனைச் சேர்ந்தவர்கள் நல்லவர்களாகவும், இராவணனைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் தீயவர் -களாகவும் வாழ்ந்தார்கள். இரண்டு பிரதேசங்களுக்கு இடையிலே பிரச்சனை ஏற்பட்டது.

அடுத்து வந்தது மகாபாரதம் இரண்டு குடும்பங்களுக்கு இடையே பிரச்சனை. பஞ்ச பாண்டவர்கள் குடும்பம் நல்லவர்களாகவும். கௌரவர்கள் தீயவர்களாகவும் வாழ்ந்தார்கள். இரண்டு குடும்பங்களும் மோதிக் -கொண்டன.

ஆனால் எங்களிடையே தீயகுணமும் நல்ல குணமும் சரிபாதியாக உள்ளது. எனவே நாம் மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். எம்மிடையேயுள்ள தீயகுணத்தை கொஞ்சமாகக் குறைத்து நல்ல குணத்தை வெளிப்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனினுள்ளும் நல்லகுணமும், தீயகுணமும் சரிபாதியாக அமைந்துள்ளது. அதனால் தானோ ஒரு கவிஞர் "கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்து செய்த கலவை நாம்" என்று பாடியுள்ளார். ஆம் காலையில் எழும்போது நல்ல, தெளிந்த மனதுடன் எழுகிறோம். ஆதவனின் வெயில் வெட்பம் கூடக்கூட எமதுள்ளேயுள்ள அசுர குணமும் வெளியேறுகிறது.

அதன் வெளிப்பாடாக கோபம், வெறுப்பு, சலிப்பு, கொலை, கொள்ளை என அதிகரிக்கிறது. மற்றவர்களின் வேதனைகளை, துன்பங்களைக்கண்டு சந்தோசப்படுபவர் -களாக மாறியுள்ளோம். இளம் சமூகத்தினரே நீங்கள் உங்களை நல்லவர்களாகவே மாற்றுவதற்கு சிறந்த வழி தியானம் செய்தலும், இறைவனை வழிபடுதலுமாகும்.



முதலில் இரண்டு நிமிடம் மனதில் அமைதியைத் தோற்றுவியுங்கள். அதனை தொடர்ந்து நிமிடங்களைக் கூட்டிக்கொண்டு செல்லுங்கள். முதலில் கஷ்டமாக இருந்தாலும் போகப்போக அதுவே ஒரு இனிமையான, சுவாரசியமான நிலையைக் கொண்டுவரும்.அது மட்டும்மல்ல இறைவனை நேசியுங்கள். உங்களுடைய இஷ்ட தெய்வங்களை ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் வேண்டிக் கொள்ளுங்கள். அரசன் அன்றே கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்? என்று மூத்தோர் வாக்குக்கு ஏற்ப நீங்கள் கேட்பவற்றை இறைவன் உடனே செய்யமாட்டார். நீண்ட நாட்களின் பின் செய்வார் உங்களை நிச்சயமாக கைவிடமாட்டார். உங்களை நல்வழிப்படுத்து -வதற்காக பல சோதனைகளைத் தருவார். ஆனால் கைவிடமாட்டார்.

எல்லோரிடத்திலும் அன்பு செலுத்துங்கள். அன்பு, கருணை போன்ற உணர்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்குங்கள். உங்களை போல, உங்கள் சகோதரர்கள், நண்பர்களை நேசியுங்கள். அயலவர்களை நேசியுங்கள் சமூகம், நாடுகளை நேசியுங்கள். அன்பு தான் ஒரு இன்ப ஊற்று. "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் நான் வாடினேன்" என்ற வள்ளலாரின் கூற்றைப்போன்று ஜீவ காருண்யப்பண்பை வளர்த்துக்கொள்ளுங்கள்.


முத்தோர் சொல் வார்த்தையும், முதிர்ந்த நெல்லிக் கனியும் முதலில் கசக்கும் பின் இனிக்கும் என்பார்கள். முத்தோர் சொல் வார்த்தைகளை மதியுங்கள் அவர்கள் எமது நல்வாழ்க்கைக்காகவே எம்மை வழிப்படுத்து -கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள். மாதா, பிதா, குரு போன்றவர்களை தெய்வமாக நேசியுங்கள்.

"அன்பு ஒன்றுதான் உலகிலே நிலையானது."

திருமதி.ம.ஞானபண்டிதன்
தி/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்

# பாதுகாப்பான கடவுச்சொல் அமைவது எப்படி?

கடவுச்சொல் என்பது கணணி, இணையத்தளம் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நம் பாதுகாப்பிற்காக அமைக்கப்படும் ஒன்றாகும். எனினும் நம்மை நெருங்கியோர், நம்முடன் போட்டியிடுபவர்கள் அதை தெரிந்து கொண்டால் அது ஆபத்தில் தான் முடியும்.




நாம் கடவுச்சொல்லை தயாரிக்கும் போது நம்முடன் மிகவும் நெருங்கிய தொடர்புள்ளவற்றை வைத்தே தயாரிக்கிறோம். இதற்கு உதாரணமாக நெருங்கியவர்களின் பெயர், பிறந்ததிகதி, சொந்த ஊர்,தொலைபேசி இலக்கம் என்பவற்றை கூறலாம். இது நம்முடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்கு தெரியும் தானே. இதை வைத்துக்கொண்டே அவர்கள் அரைவாசி கடவுச்சொல்லை கண்டுபிடித்து விடுவார்கள். மீதி பகுதியையும் அவர்கள் கண்டுபிடித்துவிட்டால் சிங்கத்தின் வாயில் அகப்பட்டது போல் நீங்கள் அகப்பட வேண்டியதுதான்.

இதற்கு என்ன செய்யலாம்...?

அதி பாதுகாப்பான கடவுச் சொல்லை அமைக்க வேண்டும். சிலர் நினைவில் இருத்துவதற்கு இலகுவாக தம்முடைய தகவல் அனைத்திற்கும் ஒரே கடவுச்சொல்லை வைப்பார்கள். இதில் வேறு யாராவது ஒன்றை கண்டு பிடித்து விட்டால் அத்தனை ரகசியங்களும் அம்பலமாகிவிடும். இது எப்படி என்றால் சைக்கிள் இருத்துமிடத்தில் ஒரு சைக்கிள் விழுந்ததும் அனைத்தும் விழுவது போன்றாகும். எனவே பாதுக்காப்பான கடவுச்சொல் எப்படி அமைப்பது என்றும் அதனை எவ்வாறு பாதுகாப்பது என்பது ப்ற்றியும் இங்கு கானலாம்.

# பாதுகாப்பான கடவுச்சொல் அமைவது எப்படி ?

ஒரு கடவுச்சொல்லானது குறைந்தபட்சம் 8 கேரடேர்களும் அதிகமாக 12ும் கொண்டு அமைக்கப்படவேண்டும். இதில் தனியாக எழுத்துக்களாகவோ அல்லது எண்களாகவோ அமைக்கப்படக்கூடாது.இரண்டும் கலந்ததாக இருந்தால் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். இதில் அமையும் எழுத்துக்கள் பெரிய மற்றும் சிறிய எழுத்துக்களாக இருப்பது மிகவும் சிறந்தது. மற்றும்ஏதேனும் ஒரு ஸ்பேசல் கேரக்டர் (8 - % $ # *& * = ) இருப்பதுபாதுகாப்பாக அமையும்.



கடவுச்சொல்லானது உங்களுடைய பெயர், பிறந்த திகதி மற்றும் முக்கிய சம்பவங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டதாக இருக்க கூடாது. எடுத்துக்காட்டாக S#*+...... என இருக்கலாம். அதில் பெரிய,சிறிய எழுத்து மற்றும் ஸ்பெஷல் கேரக்டர் என்பன காணப்படுகின்றன.

இதை நினைவில் நிறுத்துவது கடினம் எனினும் "பழக பழக பாலும் புளிக்கும்" என்பது போல் போக போக சரியாகிவிடும்.




சிலர் கடவுச்சொல்லை நினைவு வைத்திருப்பதற்காக ஏதாவது ஏட்டில் எழுதிவைப்பார்கள். இது தவறான செயல், யாரும் அந்த ஏட்டை பார்த்தால் அவ்வளவுதான். அடுத்து சிலர் ஆண்டாண்டு காலமாய் கடவுச்சொல்லை தங்கள் சொந்த பெயர் போல் மாற்றாமல் வைத்திருப்பார்கள் இதுவும் தவறு. அடிக்கடி கடவுச்சொல்லை மாற்ற வேண்டும் ஏனென்றால் பல இணையத்தளங்கள் எமது கடவுச்சொல்லை அறியும் வகையில் புரோக்கிராம்களை அனுப்புகின்றன. அவையும் கடவுச்சொல்லை அறிந்து அனுப்பியவருக்கு உங்கள் கடவுச்சொல்லை காண்பிக்கின்றன. இதை தடுப்பதற்கு கடவுச்சொல்லை அடிக்கடி மாற்றுவது நல்லது.

எனவே மேற்கூறிய விடயங்களைக் கொண்டு உங்கள் கடவுச்சொல் அமைக்கப்படுமானால் அது அதிக பாதுகாப்பாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை......

நீ. நிரோஜன்
C/Vivekananda College

நிரந்தரமற்றதின் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல்படியாக அமையும்.

பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.

நிசப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.





# முகமூடிகள்

கட்டுப்பத்தையிலிருந்து
எழுதிக்கொள்ளும் - என்
கவிதை வரிகள்
தேசங்களே காடுகளாய்
வீடுகளே கல்லறைகளாய்

மாறிப்போன பூமியில் -இன்னும் கூட
நிஜங்களைத் தேடுகிறேன்
மனிதர்களில் புதிரானவர்கள்

மனங்களின் இருக்கைகளில் மடையர்கள்
பற்றி நமக்கென்ன சிந்தனை

கோழி கூவித்தான் கிழக்கு வெளுக்கப்
போகிறதா என்ன ??
இருந்தும்........ இதயம் கதறியதால்

சிதறிய வார்த்தைகள்- இங்கே
மை இல்லா பேனா எழுத்துக்களாய்
உங்கள் மனதோடு போராட .....
தன் நிழலே தன்னை விட வளர்ந்தால்
பொறாமை கொள்பவன் - தினம் தினம்
முகமூடியணிந்து புன்சிரிப்புடன்
அங்குமிங்கும் அவசரமாக .....
அடுத்தவனை தள்ளி விழுத்தி
ஏறி மிதித்து தான் வாழத்துடிக்கிறான்
கற்பை தொடேன் என்று
கள்ளச் சாமிகள் ஒருபுறம்
அரசியல் எமதல்ல என்று
காவியுடைகள் ஒருபுறம்..
சாமிக்கும் பக்தனுக்குமிடையில்
டிக்கெட் விற்கும் குருக்கள் ஒருபுறம்..

தெருச்சண்டையிலும் கண்குளிரும்
சமாதானப் பிரியர்கள் ஒருபுறம்..

தன்பிள்ளை படிப்பதற்காய்
அடுத்தவனைக் குழப்பும் - சில
ஆசிரிய முகமூடிகள் ஒருபுறம்..
இருபது ரூபா மருந்துக்கு
ரெண்டாயிரம் புடுங்கும் - சில
வைத்திய முகமூடிகள் என்று
இன்னும் எத்தனையாயிரம் முகமுடிகள்
உத்தமர் என்ற போர்வையில் ......

பூமியின் நிஜங்கள் பகலிலும்
வானின் நிஜங்கள் இரவிலுமாய்
பாருங்கள்.......
இயற்கை கூட விலக்கல்லவே - இந்த
முகமூடி விதிக்கு

உயிர்களை மதிக்கும் போது
உணர்வுகள் தேவை என்பாய் -உன்
உணர்வுகளே உன்யனை அழைத்து
உதவாது என்று சொல்லும்வரை
உனக்கது பெரியது தான்

ஒரு தடவை
தெளிந்து பார் - இந்த
உலகம் தெரியும் - இருட்டைத் தவிர
பகலில் வாழத்தெரியாதவர்கள் தான்
அதிகம் என்பாய் - இருந்தும்
இரகசியமாக இவர்கள் எல்லாம்
சந்தோசமாகத்தான் வாழ்கிறார்கள்
நானும் கூட
நதியோட்டத்தில் ஒரு துரும்பாய்
உலகோடு ஒட்ட ஒழுகுவதற்காய்
ஏதோ ஒரு முகமுடியுடன்
சலனமற்ற சந்தோசத்துடன் ..

K.Rajkumar
Faculty of Engineering
University Of Moratuwa

# மாணவ மணிகளும் செல்போன் மணிகளும்

இதுவரை இல்லாத போட்டிமிக்க யுகத்திலே இலங்கைக் கல்வித்திட்டத்தின் போட்டிப் பொதுப்பரீட்சைகளுக்கு முகம் கொடுத்தவாறு சாதிக்கும் நோக்கத்தோடு பயணித்துக் கொண்டிருக்கிறது தமிழ் மாணவர் உலகம். தக்கன பிழைக்கும் என்ற சார்ல்ஸ் டார்வினின் கோட்பாட்டின் படி இந்த தக்கன என்பதன் தகுதிகள் மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் தக்கனவற்றின் தகுதியாக தம்மைப்பாதுகாக்கும் ஆற்றல் மற்றும் உணவு தேடுவதற்கான ஆற்றல் என்பன கருதப்பட்டன. ஆனால் மனிதவளர்ச்சியின் பேறாக இன்றைய காலகட்டத்தில் தக்கனவற்றின் மிகமுக்கிய தகுதியாக கல்வி உருவெடுத் திருக்கின்றது.

இந்த கல்வியைக்கற்பதில் தற்கால மாணவர்களுக்கு குறிப்பாக நடுத்தர மற்றும் பணக்கார வர்க்க மாணவர்களுக்கு இருக்கும் மிக முக்கிய சவால் தான் கையடக்கத் தொலைபேசிகள் எனப்படும் செல்போன்கள்.

ஒரு கூரிய கத்தியினை பயன்மிக்கதாகவும் பயன்படுத்தலாம், ஆபத்தை விளைவிக்கவும் பயன்படுத்தலாம் அது அதனை உபயோகிப்பவன் கையில் உள்ளது. கொலைகாரர்கள் கத்தியினை இன்னொருவரை கொலை செய்யப்பயன்படுத்துவர், ஆனால் தகுந்த முறையில் கற்றுத்தேர்ந்த மருத்துவர்கள் ஒரு உயிரைக்காப்பாற்ற பயன்படுத்துவர். இரு சந்தர்ப்பங்களிலும் செயலை செய்பவரின் நோக்கம் ஏதோ நிறைவேறத்தான் செய்கிறது ஆனால் கொலைகாரனோ மரண தண்டனை எனும் துன்பத்தை அனுபவிக்கிறான் ஆனால் மருத்துவர் தான் காப்பற்றிய உயிரால் வாழ்நாள் முழுவதும் போற்றப்படுவார்.

அதே கோட்பாடு தான் இந்த செல்போன்கள் விடயத்திலும் உண்டு. செல்போன்களின் தேவையையும் அவற்றைப்பயன்படுத்த வேண்டிய அவசியத்தையும் ஆழச்சிந்தித்தும் அறிவுரைகளாலும் உணரும் மாணவர்கள் அதனைத்தகுந்த முறையில் பயன்படுத்தி உச்ச பயன்பாட்டை பெறுவர். ஆனால் செல்போன்களை உபயோகிக்க வேண்டியதன் நோக்கத்தையும், அவற்றை உபயோகிக்கவேண்டிய சந்தர்ப்பங்களையும் அறியாத தளம்பல் நிலை பருவ வயதினர் அதே செல்போன்களால் தம் வாழ்வினை அழித்து பின்னர் கண்ணீர விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாம் செல்போன்களால் அடிமையாக்கப்பட்டதை அழிக்கப் பட்டதை உணரும் காலம் வரும்போது விளைவுகள் அவர்களை முற்றாக மூழ்கடித்திருக்கும். அப்போது அது வெறும் கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமாகத்தான் இருக்கும்.

வகுப்பறையில் மிகமுக்கியமான ஒரு பாடத்தை ஆசிரியர் சுவைபட தெளிவுற கற்பித்துக் கொண்டிருக்கும்போது காற்சட்டைப்பையில் கைப்பேசி அதிர்ந்தால் எந்தவொரு ஆற்றல்மிக்க மாணவனாக இருப்பினும் பாடத்தில் கவனம் செலுத்தமுடியாது தவிப்பது நிச்சயம். இது பாடசாலைகளில் நடப்பது குறைவு ஆனால் தனியார் வகுப்புக்களில் தாராளமாக நடக்கின்றது. ஆனால் ஒவ்வொரு மாணவனையும் தனியார் வகுப்பு ஆசிரியர்கள் தனித்தனியாக பரிசோதனை செய்து கற்பிப்பது நாகரிகமாகாது. மாணவர்கள் தமது கல்விக்கான இடையூறினை தாமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.


பரீட்சைகள் நெருங்கும் வேளைகளில் இரவிரவாக கண்விழித்து கற்கும் மாணவர்கள் பரீட்சையில் சாதிப்பார்கள், ஆனால் கற்கும் மேசையில் அமர்ந்தவாறு குறுஞ்செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கும் மாணவர்களின் நேரம் அவர்களாலேயே தின்னப்படுவதை உணர்வதற்குரிய பக்குவம் பெறாதவர்கள் பரீட்சைகளில் கோட்டை விடுவதில் ஆச்சரியமில்லை.



இன்னுமொரு மறுக்கமுடியாத உண்மைதான் செல்போன்களில் பேசுவதாலும், குறுஞ்செய்தி அனுப்புவதாலும் தொலைவில் உள்ளவர்களோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாம் நிகழ்காலத்தில் எமது அருகில் இருக்கும்

உறவுகளோடு வாய்விட்டுப்பேசி மகிழ்ச்சியாக இருப்பது குறைவு. இது எம் மன அழுத்தத்தை அதிகரிப்பதுடன் வீட்டிலுள்ளவர்கள் எம்மைப்பற்றி தவறாக நினைக்கும் வாய்ப்புக்களையும் உருவாக்கும்.

இன்னுமொரு விடயம் மிகவும் சுவாரசியமானது. யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் வடக்கு கிழக்கு பகுதிகளில் குளிர்களி (ice cream) விற்பனை செய்யும் வாகனங்கள் ஒலிபெருக்கிகளில் பாடல்களை இசைக்கவிட்டவாறு தாம் வந்திருப்பதை மக்களுக்கு அறிவிக்கும்,




ஆனால் இந்நாட்களில் அதிக சத்தத்துடன் ஒலிக்ககூடிய செல்போன்களில் பாடல்களை ஒலிக்கவிட்டவாறு வீதிகளில் சைக்கிள்களில் வலம்வரும் பருவ வயதினரை வீதிக்கு வந்து பார்த்து ஏமாற்றமடைகின்றார்கள் குழந்தைகள். பொதுவாக உயர்தரம்மிக்க செல்போன்கள் அதிக சத்தத்தை ஏற்படாத வகையில் தான் தயாரிக்கபடும் ஆனால் இலங்கைக்குள் குறைந்த விலையில் இறக்குமதியாகும் சில வகை தரம் குறைந்த செல்போன்கள்தான் அதிக ஒலியை ஏற்படுத்தக்கூடியனவாகவும் சூழலை ஒலியால் மாசுபடுத்துபனவாகவும் உள்ளன. எனவே இவ்வாறு பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிக்கவிட்டவாறு செல்பவர்களைப்பார்த்தால் செல்போன்களைப்பற்றி அறிந்தவர்கள் ஏளனமாகச் சிரிப்பதில் அர்த்தம் உண்டு. இசைப்பிரியர்களாக இருப்பதில் தவறில்லை ஆனால் மற்றவர்களை சினமடையச் செய்யும் இசைப்பிரியர்களாக இருப்பது தான் தவறு.

இது மட்டுமா நடக்கிறது,வழிபாட்டுத்தலங்களில், மருத்துவ சாலைகளில், வாசகசாலைகளில் பொதுக் கூட்டங்களில் செல்போன்களை செயலிழக்க செய்யவிடுவது நல்லது அல்லது silent mode இல் வைத்திருந்து விட்டு அழைப்பு வரும்போது முக்கியமான அழைப்பெனில் வெளியே சென்று பேசுவது நாகரிமான செயல், அவ்வாறில்லாமல் இடம் பாராது அலரும் செல்போன் மணிகளால் எத்தனை பேர் அவதியுறுகிறார்கள் என்பதையும் சிந்திக்கவேண்டும். பஸ்களில் பிரயாணம் செய்யும் போதும் சனசந்தடி மிக்க இடங்களிலும் செல்போன்களில் பேசும்போது அளவான சத்தத்தில் பேசுவதன் மூலம் மற்றவர்களை குழப்பாது இருப்பது மட்டுமன்றி நாம் பேசும் ரகசியத்தையும் பாதுகாக்கலாம் அதைவிடுத்து ஊரே எங்களைத் திரும்பிப் பார்க்கும் வகையில் உரத்த தொனியில் பேசுவது எம் இழிவான நிலையினை சமூகத்திற்கு பறைசாற்றும் செயலாக அமையும்.

பிள்ளைகளை வெளியே அனுப்பும்போது அவர்களின் பாதுகாப்பு கருதித்தான் பெற்றோர்கள் செல்போன்களை வாங்கி கொடுக்கிறார்கள். எனினும் அந்தப் பெற்றோர்கள் தன் பிள்ளை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப்பற்றி பெரிதும் கண்டுகொள்வதில்லை, அல்லது பிள்ளைகள் தவறான பாதையில் செல்வதை அறிந்தாலும் சில விடயங்களை வெளிப்படையாக பேசுவதற்கு பெற்றோர் தயக்கம் காட்டுகின்றார்கள். இந்த அலட்சியத்தின் காரணமாக அல்லது தயக்கத்தின் காரணமாக தங்கள் பிள்ளை தடம்மாறுவதை அறிந்தும் கட்டுப்படுத்த முடியாதவர்களாக பெற்றோர்கள் இருக்கிறார்கள். எனினும் தகுந்த முறையில் பிள்ளைகள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டுவதனூடாகவும் பாரியதொரு இலட்சியம் தொடர்பான ஆசைகளை அவர்களுக்குள் உருவாக்குவதனூடாகவும் செல்போன்களைத் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து மாணவர்களை விடுதலையடையச் செய்யலாம்.

தளம்பல் மனத்தினைக்கொண்ட யௌவன பருவத்தில் தான் பொதுப்பரீட்சைகளையும்

மாணவர்கள் எதிர்கொள்கிறார்கள். எனவே பருவ வயதில் உண்டாகும் எதிர்ப்பாலினர் மீதான கவர்ச்சியினாலும், பாலியல் உறவுகள் தொடர்பாக அறிவதற்கும் செல்போன்களை ஊடகங்களாக பயன்படுத்தும் மாணவ சமூகம் பொதுப்பரீட்சைகளில் சித்தியெய்வதை எட்டாக்கனியாகத்தான் பார்க்கும். குறிப்பாக இக்காலகட்டத்தில் 3G தொழில்நுட்பம் மூலம் தொலைபேசிகளில் இணையப்பாவனை இலகுவாகியுள்ளதால் மாணவர்கள் ஆபாசப் படங்களுக்கு அடிமையாகியுள்ளனர்



என்பதும், சமூக வலையமைப்பு இணையத் தளங்களில் தங்கள் கல்வி நேரத்தினை வீணடிக்கிறார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளவேண்டிய உண்மைகளாகும். எத்தனையோ கஷ்டமான காலகட்டங்களில் எல்லாம் கல்வியைக்கற்ற மனத்துணிவும் கட்டுப்பாடும் மிக்க இலங்கைப்பாடசாலைகளின் தமிழ் மாணவர்கள் வெறுமனே செல்போன் மூலமான சிற்றின்பங்களுக்காக சதிவலைகளில் சிக்கி கல்வியை தொலைக்கிறார்கள் எனும்போது ஒவ்வொரு சமூகப்பொறுப்புமிக்க மனித மனங்களும் வேதனையடைகின்றது.

செல்லிடத்தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்களது வியாபார உத்திச் சலுகைகளுக்காக இளம்பராயத்தினராகிய நாம் மதிமயங்கி எம் வரலாறு மறந்து அருவருப்பான செய்கைகள் புரிந்து வாழ்வை தொலைப்பதிலிருந்து விடுபட வேண்டும்.

அதற்காக நாம் செல்போன்களை எம் வாழ்விலிருந்து முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று கூறவில்லை. செல்போன்களை எம் முன்னேற்றத்திற்காகவும், அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்கவும் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற மனப்பக்குவம் பெறும்வரை பயன்படுத்த வேண்டாம் என்றுதான் கூறுகின்றோம்.

கல்வி கற்றலுக்கு உதவியாகவும், நம் நண்பர்களது முன்னேற்றத்திற்காகவும், பெற்றோருக்கு நம் செயற்பாடுகளை அறிவிக்கவும், அன்றாட செயற்பாடுகளை இலகுவாக்கவும், முக்கிய தருணங்களில் அனுமதியுடன் புகைப்படமெடுக்கவும், உயரிய இலட்சியம்மிக்க நட்புகளை உருவாக்கவும் செல்போன்களை பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை ஆனால் இவற்றைச் சாட்டாக காட்டி பெற்றோரின் பணம்பெற்று தவறான முறையில் செல்போன்களைப் பயன்படுத்தி தன்னைத்தானே அழிந்துகொண்டிருக்கும் மாணவர்களை எம் சமூகம் பீடைகளாகவே பார்க்கும்.

நீ.வர்ணன்
Faculty of Engineering
University of Moratuwa

# கற்பில்லாப் பெண்ணினம்......

கற்பிற் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?
இலக்கியத்திற் கதைத்தலுத்த தலைப்புத்தான்.
இருந்தாலும் இதையு மறிக.
இன்றைய விவாதத் தரம் புரியும்
இளைய விவாதியின் திறன் விளங்கும்.

“கற்புடை மகளிர் பிறர் நெஞ்சு புகார்”
கண்ணகி கட்சிக்காய்க் கதைத்தவர் வாதம்
மேற்படி கூற்றை மேலாகப் பார்ப்பின்
மறுக்க முடியாத மெய்ச் சொல்லாய்த் தோன்றும்.

நண்பா, நிற்க நீ ஒரு கணம்!
மாய மாரீசனை மானெனப் பார்த்த இராமனானாய்!
மயக்கம் தரும் தமிழ்ச் சொற்கூட்டம்.
ஆழமாய்க் காணின் அதன் பொருள் புரியும்.
“புகார்” எனும் எதிர்மறை வினைமுற்றுக் கெழுவாய் எது?
“கற்புடை மகளீர்” எழுவாயென்ப தறிவாய் நீ.

“கற்புடை மகளிர் கணவனன்றிப் பிறரின்
நெஞ்சுக்குள் ஒருகாலும் புகமாட்டார்”
கூறிய கூற்றின் வரிபொருளிதுவே - ஒப்புகின்றாயோ?

இப்பொழுது சொல்.
கணவனை மட்டும் கருதும் கற்புடைப் பெண்ணைக்
கண்டு வேறோர் ஆடவன் காமுறின்,
குறையுமோ அவள் கற்பு?
அவள் குற்றம் அங்கேது?
அப்படியாயின் கண்ணகிக்கு மட்டுமல்ல,
பெண்ணினத்திற்கே கடுகளவும் கற்பிருக்காது!

கண்ணகிக்காய்க் கதைக்க வந்த
கவனக் குறைவால் பெண்ணினத்தைச்
சாடிச் சென்றார்!



வழிப்போக்கன்

# புகைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள்.....

சும்மா எதாவது புத்திமதி சொல்வதற்காகத்தான் இப்படி ஒரு தலைப்பை வைத்து எங்களை அழைத்திருக்கிறான் என நினைக்க வேண்டாம். உண்மையிலேயே பல நன்மைகள் புகைப்பிடிப்பதால் ஏற்படுகின்றன. ஒவ்வொன்றாக வரிசைப்படுத்தியுள்ளேன்.

01) வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் உங்களோடு நல்ல அன்பாக இருப்பார்கள்.

02) அதிக நண்பர்களை கொண்டிருப்பீர்கள்.

03) வீட்டிற்கு திருடன் வரமாட்டான்.

04) கட்டாக்காலி நாய்கள் கூட உங்களுக்கு கிட்ட வராது.

05) பெண்கள் நெருங்கிப் பழகுவார்கள்.

## இதெல்லாம் எப்படி என்று கேட்கிறீர்களா ????

01) அனேகமாக உங்களுக்கு புற்றுநோய் வரும். எனவே விரைவில் இறக்கப் போகும் உங்களோடு குடும்பத்தார் அன்பாக நடந்து கொள்வர்.

02) நண்பர்கள் என நான் சொன்னது ஓசியில் தம் அடிக்கும் செட்.
இவர்கள் எல்லோரும் உங்களோடு நல்ல நெருக்கமாக இருப்பார்கள்.

03) இரவில் நல்ல இருமல் இருக்கும். நித்திரை வராது. இருமிக்கொண்டே இருப்பதால் வீட்டில் ஆட்கள் முழித்திருப்பார்கள் என நினைத்து திருடன் உங்கள் வீட்டுப்பக்கம் தலை வைத்தே படுக்க மாட்டான்.

04) விரைவில் முதுமையடைந்துவிடுவீர்கள் . பொல்லூன்றி நடக்க வேண்டியிருக்கும். கையில் தடி இருப்பதால் நாய்கள் கிட்ட வராது.

05) அதிகம் புகைப்பிடிப்பவர்களுக்கு ஆண்மையிருக்காது. ஆகவே உங்களால் ஆபத்தில்லை என்பதால் பெண்கள் நெருங்கிப் பழகுவார்கள்.
புகைப்பிடித்து எல்லாவற்றையும் அனுபவியுங்கள்

cumanan panchatcharam
cumanaa@gmail.com

# Gather Page

Gather Page இணையத்தளம் மாணவர்களின் கல்வி கணனிமயப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் தரமான கல்வி இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. தகவல் தொழிநுட்பத்தயல் ஏற்பட்ட புரட்சிமிகு மாற்றம் எம்மிடம் அதிவேகமாக பரவிவிடும் பொழுது கல்வி முறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றப்பாடுகளையும் உள்வாங்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. உலகம் கிராமமாக சுருங்கி விட்ட நிலையில் அனைத்து விடயங்களிலும் போட்டிகள் அதிகரித்த நிலையில் சர்வதேச தரத்திற்கு எமது தகுதியை உயர்த்த வேண்டியுள்ளது.

இந்நிலையிலே எமது மாணவர் சமூகத்தையும் அதன் தற்போதைய நிலை பற்றியும் சிந்திப்போமாயின் போரினாலும் வேறு பல காரணிகளாலும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. கடந்த காலங்களில் வெளிவந்த சாதாரண. உயர்தர, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளும் உறுதிப்படுத்துகின்றன. வறுமை அதிகரித்துச் செல்லல். கல்வி கட்டணங்கள், தரமான கல்விச்சேவை கிடைக்காமை போன்ற பல்வேறு காரணிகளினால் எமது மாணவர்கள் கல்வியிலே பின்தங்கியுள்ளனர். எமது அயல் நாடாகிய இந்தியாவிலே வறுமை தலைவிரித்தாடினாலும் அந்நாட்டு மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்திலும் ஏனைய துறைகளிலும் பல சாதனைகளை நிலை நாட்டுகின்றனர். இதற்கு தரமான சர்வதேச தரத்திற்கீடான கல்வி செயற்பாடுகள் அவர்களது நாட்டில் இருப்பதே காரணமாகும்.





எமக்கு முன்னுள்ள தடைகளையும் அந்த வரையறைக்குள் நின்று கொண்டு கற்பதும் கற்பிப்பதும் எமக்கும் சர்வதேச தரத்திற்குமான இடைவெளியினை அதிகரித்து விடக்கூடியது எமக்கு முன்னால் உள்ள அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படும் அவ்வேளை இவ்வாறான நவீன கற்றல் முறைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியமானது. முன்பு எமது மாணவர்கள் பல சாதனைகளை நிலை நாட்டியவர்கள். அப்போதைய கால கட்டத்தில் புத்தகங்களும், வகுப்பறையும் ஆசிரியரும் அவர்களுக்கு போதுமானதாகவிருந்தது. தற்போது இந்த கல்வி முறைகள் காலத்திற்கு ஏற்றனவையல்ல. ஓர் மாணவன் சுயமாகவே வீட்டிலிருந்தபடியே தனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள இன்று முடிகின்றது. இந்த வசதிகள் எமது தமிழ் மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இவ் gatherpage.com என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.




இத்தளமானது பாடசாலை மாணவர்களுக்காகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்காகவும் மற்றும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர்கல்வியினைத் தொடரும். மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. ஓர் மாணவன் செய்யும் பயிற்சிகளும் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகளும் பொதுப் பரீட்சைகளில் கணிசமான செல்வாக்கை செலுத்துகின்றன. ஓர் குறிப்பிட்ட பாடசாலைக்கு தொடர்ச்சியாக நல்ல பெறுபேறுகிடைக்க இதுவும் ஓர் காரணமாகும். இத்தளத்தில் அனைத்து பாடசாலைகளில் இடம்பெறும் பரீட்சைகள், பயிற்சிகளை எல்லா மாணவர்களுமே செய்தவற்கு வழியேற்படுகின்றது. அதேபோல் சிறந்த ஆசிரியர்களின் பாடக்குறிப்புக்கள் வீடியோ மூலமான கற்பித்தல் களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாட ரீதியிலான குறிப்புக்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்கள் பதிவிறக்கம் செய்ய முடியும்.

இதேபோல் கருத்துக்களம் எனும் பகுதியில் மாணவர்கள் தங்களது சந்தேகங்களை ஏனை- யோரிடம் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இக் கருத்துக்களமும் பாடசாலை, பல்கலைக்கழகம் பொதுவானவையென அவரவர் நிலைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தளத்தில் கல்வி தொடர்பான பல்வேறுபட்ட ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றை விட ஒவ்வொரு மாணவரும் தமது தகுதிக்கேற்ப தெரிவு செய்யக்கூடிய கற்கை நெறிபற்றிய முழு விபரமும் அவற்றை கற்றக்கூடிய இடங்களும் விபரமாக உள்ளடக்கப்பட்டுள்ளன. உள் நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் கல்வி கற்பதற்காக செல்லும் மாணவர்களுக்கு தேவை- யான அனைத்து வழிகாட்டுதல்களையும் கூட இத்தளம் உள்ளடக்குகின்றது.

இவ் இணையத்தளத்தினூடாக மாணவர் களுக்குள் பிரச்சனைகள் தடைகளை நீக்குவதற்கான உளவியல் ரீதியான ஆலோ- சனைகளையும் நிபுணர்களால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் GatherPage இணையத் தளத்திலிருந்து ஏனைய முக்கிய தளங்களுக்கு செல்வதற்கான இணைப்புக்களும் இதிலுள்ளன.





இவ் இணையத்தளத்தின் மூலம் மாணவர்கள் பல பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் தனியார் கல்வி நிலையங்களில் வழங்கப்படும் பாடக் குறிப்புக்கள், மாதிரிவினாவிடைகள், கடந்தகால பரீட்சை வினாவிடைகள் போன்ற வற்றினை மாணவர்கள் வீட்டிலிருந்தவாறே இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களை சேர்ந்த மாணவர்கள் தமக்குள் கருத்துக் களினை பரிமாறிக்கொண்டு தமது பாட ரீதியான சந்தேகங்களை தீர்த்துக் -கொள்ளக் கூடிய களமாக இந்த இணையத்தளம் அமையும்.

மாணவர்கள் 40 கேள்விகளை உள்ளடக்கிய வினாத்தாள்களை இணையத்தளத்திலே பயிற்சி செய்து சரி, பிழை பார்க்கக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு பரீட்சையின் போதும் எழுந்தமானமாக 40 கேள்விகள் மாணவர் களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

வெளிநாட்டிற்கு மேற்படிப்பிற்காக செல்லும் மாணவர்கள் தங்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் இந்த இணையத் தளத்தினூடாக தெரிந்து கொள்ளலாம்.




IELTS, TOFEL போன்ற பல பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தல்களை இந்த இணையத் தளத்தின் ஊடாக பெற்றுக் -கொள்ளலாம். மாணவர்களுக்கு கணனி மற்றும் ஆங்கிலக் கல்வி என்பவற்றின் இலவசமாக இணையம் மூலம் கற்பித்தல் போன்ற இன்னும் பல சேவைகளை இந்த இணையத்தின் மூலமாக மாணவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பல மாணவர்களும் பெற்றோரும் நகர்ப் புறத்திலே சிறந்த பாடசாலைகளில் தங்களுக்கு இடம் கிடைக்க வேண்டுமென அலையும் காலத்தில் இத்தளம் அவ் எண்ணக் கருவை மாற்றுவதாக உள்ளது. அனைவருக்கும் ஒரே விதமாக கற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ் இணையத் தளம் பயன்படுத்துவோருக்கு மிகப்பெரும் பெ- றுமதியினை அளிக்கக்கூடியது என்பது சர்வ நிச்சயமானது. ஆனால் அனைத்து மாணவர்களும் இணையத்தளத்தினை பயன் படுத்தும் வசதியினை பெற்றுக்கொண்டு பயன்பெற வேண்டும் என்பதே அனைவருக்கும் சமமாக சிறந்த கல்வியினை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இதை உருவாக்கியோரின் அவாவாகவுள்ளது.

# கல்வி கற்றலில் தன்னம்பிக்கை என்பது முக்கியமான விடயம்



### உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்..........

நான் சுமங்கலி சிவகுமாரன். நான் தரம் 5 வரை கொட்டாஞ்சேனை நல்லாயன் அரசினர் தமிழ்ப் பெண்கள் வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். தரம் 6 கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியிலும் தரம் 7 தொடக்கம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் கற்றேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலே 158 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தரத்தில் 10 அதி விசேட சித்திகளையும் பெற்றேன்.

### தாங்கள் கணிதத்துறையைத் தேந்ததன் காரணம்......

சிறு வயதிலிருந்தே எனக்கு கணிதம் கற்பதில் ஆர்வம் அதிகம். அத்துடன் தரம் 10, 11 ல் படிக்கும் காலங்களில் கேத்திர கணிதத்தில் மேலதிக பயிற்சிகளை மேற் கொண்டதன் மூலம் கணிதம் கற்பதற்கான ஆர்வம் மேலும் அதிகரித்தது.

### தாங்கள் கல்வி கற்ற முறை பாடசாலை தனியார் கல்வி நிலையங்களின் பங்களிப்பு பற்றி.......

நான் எப்போதும் கணித பாடத்தில் அதிக பிரசினங்களை செய்து பார்ப்பேன். எப்போதும் புதிய பிரசினங்களை செய்து பார்ப்பதில் ஆர்வம் அதிகம். எனக்கு இரசாயனவியலிலும் ஏனைய பாடங்களிலும் அதிக விருப்பமானது. எப்பொழுதும் வகுப்பறையிலேயே பூரணமான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்வேன். எந்த ஒரு புதிய விடயத்தைக் கேட்கும் போதும் முதற் தடவையிலேயே அதனை சரியாக விளங்கிக் கொள்ள முயற்சி செய்வேன். அவற்றின் மூலம் வீட்டில் படிக்கும் நேரத்தினைக் குறைத்துக் கொள்ளலாம். எனினும் எப்போதும் ஆசிரியரிடம் கற்பதற்கு மேலதிகமாக சுய கற்றலை மேற்கொண்டேன். எல்லா விடயங்களையும் மனனம் செய்வதை விடுத்து நன்றாக விளங்கிக் கொள்ள முயற்சி செய்வேன். இதுவும் எனது வெற்றிக்கு காரணமாக அமைந்தது. கடந்த கால வினாத் தாள்களை புள்ளித் திட்டத்துடன் நேரத்திற்கு செய்து பழகுவேன். என்னைப் பொறுத்தவரையில் இது மிகவும் முக்கியமானது. இறுதிக் காலம் வரை பாடசாலைக்குச் சென்று கற்றலில் ஈடுபட்டேன். அத்துடன் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு ஆசிரியர் வீதம் தனியார் கல்வி நிலையத்திற்கும் சென்று கற்றலில் ஈடுபட்டேன். இரண்டு கற்றல்களுமே எனது பெறுபேற்றிற்கு உதவியாக அமைந்தன.

நான் எனது பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவியாகக் கடமையாற்றினேன். அத்துடன் சதுரங்கம் மற்றும் மெய்வல்லுனர் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு கல்லூரி விளையாட்டுத் துறைக்கு எனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளேன். இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மாணவர் கல்விக்கு ஊக்குவிப்பாக அமையுமே அன்றி தடையாக அமையாது என்பது எனது கருத்தாகும்.

## ஏனைய மாணவர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது....

கல்வி கற்றலில் தன்னம்பிக்கை என்பது முக்கியமான விடயம். நல்ல பெறு பேறு பெறுவேன் என்ற நம்பிக்கை எப்போதும் எமக்கு இருக்க வேண்டும். இணைந்த கணிதம் கடினமான பாடம் என்ற கருத்து மாணவர் மத்தியில் உள்ளது. இது தவறான கருத்தாகும். என்னைப் பொறுத்தவரை இணைந்த கணிதமே இலகுவான பாடம். கல்வியினைச் சுமையாகக் கருதி மனதைத் தளரவிடாது மனதை எப்போதும் இலகுவாக (Relax) வைத்திருக்க வேண்டும்.
ஒவ்வொரு தவணைக்கும் அதற்குரிய பாடங்களை சரியாகத் தயார் படுத்தினாலேயே இறுதியில் நீங்கள் இலக்கை அடைய முடியும். சகல கஷ்டங்களையும் தாண்டி சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

## உங்கள் எதிர்காலத் திட்டம் பற்றி நீங்கள் கூற விரும்புவது......

நான் சிறந்த பொறியியலாளராக வர வேண்டும். அத்துடன் கணிதத்தில் மேலும் சாதிக்க வேண்டும் என்கின்ற ஆர்வம் எனக்கு எப்போதும் உண்டு. கணிதத்திலுள்ள விடயங்களை முழுமையாகக்கற்க விரும்புகின்றேன்.

எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நண்பர்கள், சிரேஷ்ட மாணவர்கள், மற்றும் ஆசிகளை வழங்கிய பெரியோர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். எனக்கு இப் புகழ் கிடைக்க அருள் செய்த இறைவனுக்கு தலை வணங்குகிறேன்.





# தற்காப்பு கலை



இந்த உலகில் பல்வேறு பட்ட தற்காப்பு கலைகள் உள்ளன உதாரணமாக கராத்தே ஜுடோ ஒவ்வொரு கலைகளிலும் பலவேறுபட்ட ஸ்டைல்கள் உள்ளன கராத்தேயை பொறுத்தமட்டில் shotokan ஸ்டைல் பிரதானமான இடத்தை வகிக்கிறது.

இதனுடன் வஜிரோ தைகொண்டோ போன்றனவும் உள்ளன. கராத்தே என்பது பல நூறாண்டுகள் பழை-மையான கலையாக இருந்தபோதும் ஜப்பானை சேர்ந்த மாஸ்டர் கிண்க்ஷின் புடோக்குஷி (1868-1957) என்பவரால் பல எளிய நுணுக்கங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட சிறந்த ஸ்டைல் sho-tokan ஆகும்.



ஆரம்ப காலங்களில் கராத்தே எனப்படுவது எல்லோராலும் கற்றுக்கொள்ள முடியாத சிக்கலான விடையமாக இருந்து முக்கியமாக கராத்தே பழகுபவர்கள் சிறந்த உடல்வாகு கொண்டிருப்பவர் களாக இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. இதை எல்லாம் தகர்க்கும் முகமாக சிறியவர் முதல் பெரியவர் வரை பழகுவதற்கு ஏற்றால் போல எளிய கலை நுணுக்கங்களை உள்ளடக்கி உருவான ஸ்டைல் தான் ஷோடோகஹ்ன் ஆகும்.

Shotokan ஸ்டைலில் 27 காத்தா வகைகள் உள்ளன. காத்தா எனப்படுவது பல நுணுக்கங்களையும் யுக்திகளையும் கோர்வையாக உள்ளடக்கி குறிப்பிட்ட நேர இடைவெளியில் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயன்முறை ஆகும்.

கராத்தேயில் ஒவ்வொரு நிற பட்டிகளுக்கு ஏற்ற படி கராத்தே வீரரின் தரம் மதிப்பிடப்படும். white, orange, green, brown & black.

***<u>தற்காப்பு கலை பழகுவதின் நன்மைகள்</u>***

- தன்னம்பிக்கை
- தற்பாதுகாப்பு
- சுய கட்டுப்பாடு
- பயம் இன்மை
- உடல் பயிற்சி
- ஒழுக்கம்
- ஆரோக்கியமான வாழ்வு
- சுறுசுறுப்பு

தமிழ் சமூகத்தை பொறுத்த வரையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கராத்தே பழகுவதை விரும்புவதில்லை ஏனனில் கராத்தே பழகுபவர்கள் சண்டியர்கள் என்ற தவறான மாயை நிலவுகிறது. இது முற்றிலும் தவறான ஒரு அபிப்பிராயம் ஆகும். ஆனால் உண்மையில் கராதேயை சீராக பழகுபவர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாக திகழ்வார்கள்.

தற்காப்பு கலை சம்பந்தமான சிறு அறிமுகத்தையே இப்போது பார்த்தோம் வருகிற இதழ்களில் அதன் தாக்குதல் நுட்பங்கள் தடுப்பு முறைகள் ஆகியவற்றை விரிவாக ஆராய்வோம்

R.Rossy Harinth
Faculty of Engineering
University of Moratuwa

## “அண்டங்காக்கை தூக்கியதால் அழகான அணில் குஞ்சொன்று ஆகாயம் கண்டது”

வருஷம் 2018......

“தமிழ் தேய்ந்து வருகிறது.......”

இங்கனம் மேடையில் யாரேனும் முழங்கினால் நம் கதையின் நாயகன் வலஸ்ரன் மிக்க வருந்துவான்.

காரணம் அவனும் ஒரு “தமிள்” எழுத்தாளன்!

“தமிழ்த்தேய்வினால் நானும் தெரியப் படாம அல்லது இல்லாமலே போயிடுவேனோ” என்பதும், “நானெல்லாம் எழுதிக் கொண்டிருக்கேக்க “தமிள்” எப்படி தேய்ஞ்சு போக முடியும் ” என்ற நியாயமான(??) கேள்வியுமே அவன் கவலைக்கு காரணங்காளாயிருந்தன.

எல்லாக் கலைத்துறைப் “பிரமுகர்களையும் பிரம்மாக்களையும்” போலவே அவனும் எழுத்துலகில் கால் தடுக்கி விபத்தால் வீழ்ந்தவன்தான். அப்படித்தான் அவன் எல்லோரிடமும் கூறிக்கொள்வான். அந்த வரலாற்று “விபத்து” க்கு வித்திட்டது, அவனுடைய “அரைக்காற்சட்டை” வயதில் யாழில் வெளிவந்த “சிரஞ்சீவி” வார சஞ்சிகை! அதன் கவிதைப் பக்கத்தில் வந்திருந்தது ஓர் ஓவியம்! அதில் உருப்பெருத்திருந்த (கின்னஸ்!!) மதுக்கோப்பையினுள் மூழ்கும் ஒரு மனிதனின் அபயக் கரத்துக்கு.... ஐயகோ!! மேலிருந்து ஒரு சுருக்கு கயிறுதான் இறங்குகிறது. இந்த காட்சியைக் களமாக்கி கவிதை புனைய வேண்டுமாம்!

“இண்டைக்கு சும்மாதானே இருக்கிறன்” என்ற வாக்கியத்துடன் வளர ஆரம்பித்த சிந்தனை “சரி! சும்ம ட்ரை பண்ணிப் பார்ப்பம்” என்பதாக முடிந்தது.

“எல்லா வரிகளும் ஒரே எழுத்தில் ஆரம்பித்தால் ஒரு கவிதை அமைந்துவிடும்” போதித்தது வயது பொழிந்தான் வலஸ்ரன்.

“மது பருகி
மதி இழந்த மனிதா!
மரணதேவன் உன்னை
மயானத்துக்கு அழைக்கிறான்!”

எழுதிய அவனுக்கே அவ்வளவு அர்த்தமாகாவிடினும் கவிதை களையாய் உள்ளது புரிந்தது. முடித்து விட்டு மூச்சடக்கி மூன்றாவது முறை படிக்கும் போது முகிழ்த்த மகிழ்ச்சியில் முங்கினான். அடச் சீ!! இவனைப் பற்றி எழுதும்போது நானும் கூட அடுக்கடுக்காய் அர்த்தமில்லாமல் அரற்றி அறுக்கிறேனே!!!

கவிதை பிரசுரமாகாவிடினும் தான் ஒரு எழுத்தாளன் என்ற எண்ணம் அவன் மனத்தில் பிறந்து, பீடித்து பின் நீடிக்கவும் செய்தது. விசயம் ஏதுமில்லா தன் வெற்று கவிதைகளுக்கும் கதைகளுக்கும் எதுகை மோனைகள் கொண்டு “கலர்” சேர்த்தான். அரும்பும் மீசை முடுக்கியதால் பெண்டு பிள்ளைகளைக் கவர அடித்த ஏராள “ஸ்டண்டுகளோடு” அவன் எழுத்து இன்னுமும் வளர்ந்தது!! அவன் “அடுக்கடுக்கடுக்கடுக்கடுக்காய்” அடுக்கிய அர்த்தமற்ற கோர்வைகள் சில பல கோதைகளின் கடைக்கண் கடாட்சம் கிட்ட வகை செய்தது என்னமோ உண்மைதான். ஆயினும் அவர்களே கடையாய் கசடுகளாய் இருந்ததால் இவன் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை என்பது மற்றுமொரு உண்மை!!

எத்தனையோ மோதல்கள் நடந்திருந்தும் கன்னி கழியாது கம்பீரமாய் காட்சி தருகிற மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வலஸ்ரனும் அறிமுகவாசியாகிவிட்டிருந்த வருடம் 2016.

காகிதம் தேடியவனுக்கு கட்டுக்கொப்பி கிடைத்தது போல் இலகுவாய்க் கிடைத்த இணையத்தில் ஓயாமல் “எழுத்துக்குப்பை” கொட்டினான். கணினி விசைப்பலகையில் இரு விரல் மட்டுமே கொண்டு விளையாடுவதால் தன் “ஹைக்கூ” வை கூட விடிய விடிய இருந்து தட்டினான். (அந்த “ஹைக்கூ” வில் இருபதுக்கு குறையாமல் வரிகளிருப்பது வேறுவிடயம்!!)

“தனக்கு ஒரு புனைபெயர் வைக்க கூட கற்பனை இல்ல...... , இவனெல்லாம் என்ன எழுத்தாளன்?? ”

என்று யாராவது நினைத்து விடுவார்களோ என்று பயந்தே ஓரிரு நாட்கள் "செமையாகச்" சிந்தித்தான். வழக்கம் போல் உடனே "கூகிள்" பண்ணாமல் வாழ்வில் முதன்முறையாக கொஞ்சம் வித்தியாசமாக, சுயமாக யோசித்தான்.
"புனைபெயருக்கு எல்லாரும் தமிழிலதான் யோசிப்பாங்க...... நான் ஒரு "சேஞ்சுக்கு" கணிதத்தில யோசிக்கலாமோ!!!"

கணிதன், சதுரன், கேத்திரன் என்று ஆரம்பித்து கடைசியில் ஆரன், இணைகரன், சரிவகன் என்று தெரிவுப்பட்டியல் ' நீண்டது. ஒவ்வொன்றாக உச்சரித்தான். ஒருவழியாக.......

".......ம்ம்ம்ம்......சரிவகன்...ம்ம்..ச..ரி..வ..க..ன்....சரி. ....வகன்...." என்று தன் தலையை சரித்து சரித்து யோசித்தபோதே அவன் முகம் ஒருவித பூப்புக்கு போயிற்று. அந்த மலர்ச்சி சொல்லியது என்னவெனில் அவன் எழுத்துலகில் இனி "சரிவகன்"!! தெரிவுக்கான காரணம் அதில் "சரி" என்பதாக ஒரு தமிழ் அர்த்தம் உள்ளதாம். என் நல்ல நேரம்!! "சதுரன்" என்றால் "சாதுரியம் மிக்கவன்" என்பதை அந்த அறிவுமதி அறியாது. இல்லையெனில் "எதிர்காலத்தில்" அதாவது இந்த 2016 இல் என் பெயரைச் "சுட்டிருப்பான்" இந்தச் சுகப்பிரம்மம் (புராணக் கதைக் கிளியொன்றின் பெயர்!!).

பாவப்பட்ட "தமிள்" எழுத்துலகில் அவன் பயணம் ஆரம்பித்தது.

"நாந்தாண்டா சரிவகன்...." என்று காணும் ஒருவர் விடாமல் சொல்லிக் கொண்டிருப்பான். "பின்னயென்ன.." ராப்பகலா முழிச்சு கஸ்டப்பட்டு யோசிச்சு அடிக்கிறதுக்கு பிரயோசனம் வேண்டாமே? என்று தனக்குதானே சொல்லிக் கொண்டே தன் இரு பெயர்களையும் பிரபல்யப்படுத்த முயல்வான், வலஸ்ரன் என்கிற "சரிவகன்......" இவ்வாறாக இறுதியில் இவனைப் போன்ற பல "பிரசித்த" எழுத்தாளர்களுடன் சங்கமித்தான்........

*************************************

2018 இல் அவன் மூன்றாவது வருட மாணவனாகிவிட்டிருந்த இரண்டாவது மாதத்திலேயே ஒரு புதிய தன்மானப் பிரச்சினையை (அவனைப் பொறுத்தவரையில்) எதிர்கொண்டான். சிறுகதைப் போட்டியொன்று!! பல்கலைக்கழக மாணவர்களின் எழுத்தாற்றலுக்கு இறுதி அடைவுமட்டமாக, தரமான ஆக்கங்களுடன் வருடம் பல கண்டு வெளிவந்து கொண்டிருந்தது ஒரு சஞ்சிகை! எட்டக் கடினமான உண்மையிலேயே தமிழ் வாழ்ந்து கொண்டிருந்த "வணக்கம்" சஞ்சிகை!! அதன் பிரமாண்ட சிறுகதைப் போட்டி அறிவித்தல்தான் சிற்றெறும்புக் கூட்டமாக மாறி அவனைக் குடைய ஆரம்பித்திருந்தது. காரணம் கீழ்வருமாறு......

முக்கிய குறிப்பு:- காரணத்தை விளக்க அடுத்த வர இருக்கும் பந்தியில் மட்டும், ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் "அவனைப் பொறுத்தவரையில்" என்பதை தயவுகூர்ந்து உங்கள் மன "பிராக்கட்டில்" போட்டுக்கொள்ளுங்கள். ம்ம்.......... போட ஆரம்பியுங்கள் அடைப்புக்களை!!

பல்கலைக்கழகத்தில் அவன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட எழுத்தாளன். அவன் எழுத்தினை ரசிப்பவர்கள் ஏராளம். "மச்சான்! கொஞ்சம் "டெவல்ப்" பண்ணலாண்டா!" என்று "நைஸா" கவும் நோகாமலும் சொல்லும் நண்பர்கள் எல்லாம் தமிழ் இரசனை இல்லாத "மக்கு" ஜென்மங்கள். இந்த சிறுகதைப் போட்டியில் வெற்றிக்கனியைத் தட்டிப் பறிப்பதென்பது வலஸ்ரனுக்கு ஒரு பூதாகாரமான தன்மானப் பிரச்சினை.

வலஸ்ரனானவன் தன் ஆக்கங்கள் அதன் வாசகனில் ஏற்படுத்தக் கூடிய மாறுதல்களைப் பற்றி எள்ளவேனும் எண்ணாதவன். சமூகம், சீர்திருத்தம், புதுமை, புரட்சி, உண்மை, உலகியல் இவையெல்லாம் அவன் அகராதிக்கு என்றும் புதியவை. தன் ஆக்கத்தை வாசிக்கத் தொடங்குபவனை அதை முடியும் வரை வாசிக்கச் செய்தலே "முழுமையானவெற்றி" என்கிறது அவனுடைய அதே அகராதி. அதற்காக அவனுக்கு தெரிந்த ஒத்த கருத்துச் சொற்களைச் சேர்த்து அவன் செதுக்கும் செந்தமிழ் சொற்றொடர்களும் அந்த

முழுமையான வெற்றியை அடிக்கடி அவனுக்கு பெற்றுத்தர தவறுவதே இல்லைதான்!!! உண்மையில் அவன் ஆக்கங்கள் யாவுமே அவற்றின் உட்கிடக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டு வெறும் சொற்களின் சேர்க்கையாய் மட்டுமே இருந்தன. தன் "பெயர்களையும்" தனக்கும் தமிழில் எழுதத் தெரியும் என்பதையும் பறைசாற்றுவதே அவன் எழுதுவதன் தலையாய நோக்கமாக இருந்தது.

சிறுகதைக்காய் எங்கேனும் ஒரு கரு "கொத்த" காகமாய் அலைந்து கொண்டிருந்த போதுதான் கீழ்க்காணும் சம்பவம் நிகழ்ந்தது.

"தண்ணியடித்தவன்
தடுமாறிவிழுந்திருந்தான்
தண்ணிக்குள்! "

இதுவும் நம் "சரிவக"னின் கவிதைகளில் ஒன்று.

இதை வாசித்ததால் வசீகரிக்கப்பட்ட அவனுடைய பெண் நண்பிகளில் ஒருத்தி தன் கண்மணிகள் விரிய "என்னண்டு இப்பிடியெல்லாம் யோசிக்கிறீங்க!!" என்று பாரட்டிய போது இவனுக்கு ஒரு ஐந்தரை அடி "ஏசி" ஒன்று அங்குல இடைவெளிகளில் நிற்பதாய் உச்சி, உடல் எல்லாம் புல்லரித்துக் குளிர்ந்தது.

"அதாவது.......ம்ம்" மூண்டு வரியும் "த" வில தொடங்குது. அதோட மேலயும் கீழயும்...... அதாவது முதல், கடைசி வரியில தண்ணி மறுபடி மறுபடி வர்றதால நல்லா இருக்குமெண்டுதான் எழுதின்னான்..... என்று இவன் "நிஜப் பின்னணி"யை விளக்க முயலுமுன்பே அவள் முந்திக் கொண்டு கேட்டாள்.

"குடிக்கிற ஆக்கள் பெரும்பாலும் விளக்கங் கெட்டு தவறித்தான் அதுக்குள்ள விழுகினம் என்றதை எவ்வளவு சிலேடையாச் சொல்லியிருக்கிறீங்க.."

வலஸ்ரன் சட்டென்று வாயை மூடிக்கொண்டான். "ஆகா! இதுக்கு இப்பிடியும் ஒரு அர்த்தமா........" என்று உள்ளூர நினைத்தவாறே அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்ந்தவாறு தலையை "மாங்கு மாங்கென்று" ஆட்டினன். அப்போதுதான் அவனுக்குள் ஒரு ஞானோதயம், புதிதாய் வந்துள்ள "எலக்ரோனிக் பல்ப்" போல் சட்டென்று உயிர்த்து ஒளிர்ந்தது! "கருத்"தேடல் நிறைவுக்கான சாவுமணி அது!!

"ஓகோ...நாம ஏதோ நினைச்சு கிறுக்க இவங்க அடிவரை போய் நிறைய கிளர்ராங்களே!! குட்!! இந்த விசயத்தில உச்சப்பயன்பாடு எடுக்கத்தான் வேண்டும்"

அதற்கடுத்த நடவடிக்கையாய் . தேடிப்பிடித்து ஒரு அருமையான அஸ்திரத்தைக் கண்டறிந்தான். அந்த ஆயுதத்தின் பெயர்........ உருவகக்கதை!!!

உருவகக்கதையானது நேரடியாக விசயத்தைப் பகராமல், உருவகமாக உள்ளவற்றை உலகியல் உண்மைகளோடு தொடர்பு படுத்தி விளங்கும் திறமையை, வாசகனிடத்தில் எதிர்பார்க்கும்.

இதை வலஸ்ரன் எக்காலத்திலோ அரசல் புர-சலாகக் கேள்வியுற்றிருந்தான். அவன் வாழ்க்கையில் வாசிக்க முயன்றிருந்த ஒன்றிரண்டு உருவகக்கதைகளும் எதுவும் புரியாமல் சொதப்பியிருந்தன. அவனுக்கு அவை எழுத்துலகின் "மொடெர்ன் ஆர்ட்"!!!

உருவக்கதை! உச்சப்பயன்! இதுவே வெற்றிப்பாதை!! முடிவு செய்து இறங்கினான்!

பிறந்தது அவனது முதலாவது உருவகக்கதை. "அண்டங்காக்கை தூக்கியதால் அழகான அணில் குஞ்சொன்று ஆகாயம் கண்டது" தலைப்பின் ஓரத்தில் சின்னதாய் ஒரு "டாஷ்" கீறி "உருவகக்கதை" யை தெளிவாகப் பெரியதாகப் போட்டு அழகு பார்த்தான்.

இவ்வளவு பரபரத்து இவன் அல்லாடுவதன் காரணம் திலகன் அண்ணை! அவர் நான்காம் வருட மாணவர், அதே மொரட்டுவை! மொழிகள் தேய்கின்றன என்று கீழைத்தேய

நாடுகளெல்லாம் காது வலிக்கும் படி கதறிக் கொண்டிருந்த காலத்தில்,

"மொழிகள் இலக்கணத்தை வரப்பாய்க் கொண்டு ஓடிய அருவிகள்! அதில் இருமருங்குக் காட்சிகளையும் விம்பங்களாய்க்காட்டி, பெருக்கெடுத்து பாயும் இடங்களை இலக்கியங்கள் என்றோம்!! பாயும் நீர் வரப்புடைத்து அணைபோட முடியாமல் ஆங்காங்கே கசிந்தாலும் அங்கும் பயிர் வளர்ப்பது புத்திசாலித்தனமே. அதை விடுத்து அடையாளம் அழிகிறது என்று ஆர்ப்பாட்டம் செய்து பலனில்லை. மொழிக்கு இலக்கணம் வகுத்ததன் நோக்கம் பக்கத்திலிருப்பவன் பேசும் போது அதே மொழியறிந்த அடுத்தவனுக்கும் புரியவேண்டும் என்பதே. இப்போது பக்கத்தில் இருப்பவர்களுடன் மட்டுமே நம்மால் பேச முடியுமென்ப தில்லையே!!!! தாராளமாய் மாற்றங்கள்!!

கால மாற்றத்துடன் போட்டியிடுவது மிகவும் கடினம்....ஆயினும் நாங்கள் முனைவோம்!!!"

என்று வித்தியாசமாக வலஸ்ரன் போன்றோருக்கு புரியாத ஒரு பாசையில் ஏதோ வெல்லாம் எழுதி அந்நாளில் பிரபல்ய மாயிருந்த "வித் அஸ்" சமூக வலைத் தளத்தில் நிறைய "கொமெண்ட்ஸ்" அள்ளியிருந்தார் திலகன் அண்ணை!
இவருடைய போட்டியே வலஸ்ரனை கூடுதல் கவன மெடுத்து மேற்படி அ.தூ.அ.அ.ஆ.க சிறுகதையில் "ஓலச் சுவடியிலயும் ஒட்டோகிரா.'.பா??", "ஔவைக்கே ஔடதமா?", "துரோகியே!மொஸில்லா .'.ப்யர் .'.பொக்ஸ் வழி இறங்கிய கூகிள் குரோம் நீ!!", "கண்ணக் கட்டி காட்டில விட்டா; அது காடெண்டு எப்பிடித் தெரியும்??" என்ற வாறான அவன் "ட்ரேட்மார்க" தொடர்களை அள்ளி இறைக்கச் செய்திருந்தது.

அவன் வாய்க்கு வந்தபடி எழுதியுள்ள வசனங்கள் யாவும் பார்க்கப் பரம சாதுக்களாய் தெரிந்தாலும் கூர்ந்து படித்தால் கலியுக சாமியார்கள் போல அத்தனை விசயங்களைப் பதுக்கி வைத்திருப்பதாய்த் தோன்றும். உருவகக்கதையென்னும் போர்வையில் போட்டிக்கு வரும் இந்த வைரஸ்கள்.

கருத்தாழம் கண்டு வாசிக்கப் போகும் போட்டி நடுவர்களை மண்டை காயும் வரை யோசிக்கச் செய்யவிருப்பது உறுதி. அவனை வியந்து பாரட்டிய வண்ணம் அவர்கள் "முதல் பரிசு.. "சரிவகன்" வலஸ்ரன்.... என்று தன்னுடைய இரு பெயர்களும் மண்டபச் சுவர்களில் மோதித் தெறிக்க அழைப்பது அவனுக்கு இப்போதே கேட்டது.

அது நடந்தே விட்டது. திலகன் அண்ணாவை இரண்டாவதாக்கி , "வணக்கம்" நடாத்திய பெருமெடுப்பு விழாவில் முதல் பரிசை வாங்க மேடைக்கு அழைக்கப்பட்டான். மேடைப் பயத்தினால் கலங்கியிருந்தாலும் மண்டப சுவர்களின் வாளிப்பு அவனுக்கு சுவாரசியம் சேர்த்தது. அவன் பெயர்கள் நன்றாக மோதித் தெறித்து எதிரொலித்ததால்!!!
நிகழ்ச்சியின் பிரதம விருந்தினரும் "வணக்க"த்துக்கு வயதினைத் தொடக்கிய அதன் முதல் ஆசிரியருமான திரு வர்ணன் அவர்களிடம் பரிசிலையும் ரொக்கத்தையும் பெற்றுக் கொண்டான்.

கைலாகு கொடுத்த வர்ணன் அடுத்த இரண்டாவது நிமிடத்தில் ஒரு சம்மட்டியை அவன் தலையில் இறக்குவார் என்பதை நம் நாயகன் அறிந்திருக்கவில்லை..

"உங்கட கதை நல்லதுதான். தலைப்பே நிறைய விசயம் சொல்லுது."

உடனே இவன் உள்ளூர நினைத்துக் கொண்டது என்னவெனில் ஓமோம்!! ஏழு சொல்லுகளில நாலு சொல்லு அவில தொடங்குது. ம்ம்ம்.....வேற.....ம்ம்.... அணில் ஒண்டு ஆகாயம் பாக்க அண்டங்காகத்தை "ஹயர்" பண்ணிப் போகுது! வேறென்ன கிடக்கு அதில?
வர்ணன் தொடர்ந்தார்.
"ஆனா எனக்கு சில சில இடங்கள்ல சின்ன குழப்பம்.... நீங்களே மேலோட்டமா ஒரு விபரணை சொன்னீங்களெண்டா சபையோரும் கேட்ப்பினம்....."

அப்படியே திகிலாய்ப் பார்த்தான். கதையே சரியாக ஞாபகம் இல்லையே!! அடுத்த சில நிமிங்களில் மேற்படி விபரீத வேண்டுகோளால் வெருண்டுவிட்ட வலஸ்ரன் சமாளிக்கும் சாமர்த்தியம் போதாமல் அடித்த கூத்துக்கள்

அம்மண்டபத்தின் வாளிப்பான நான்கு சுவர்களிலும் நன்கு எதிரொலித்தன.

வர்ணன் திகைத்து நடுவர், ஆசிரியர் குழாத்தை பார்த்து முறைக்க அவர்களோ ஆளாளுக்கு விட்டத்தை வெறித்தபடி வாளாவிருந்தார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் திலகனை முதல் பரிசுக்காய் வர்ணன் அழைத்தார்.

தலை குனிந்து காது கிழிக்கும் கிண்டலுக்கிடையில் நடந்து கொண்டிருந்த வலஸ்ரனுக்கு தெரியும். அது அவன் ஆக்கங்களுக்கான "கருகிய தார் டின்" சைஸில் ஒரு பெரிய முற்றுப்புள்ளி... அவர்களின் "ஹை டெசிபெல்" கேலித்துவனிகளைக் காது மடலை மூட முடியாத காரணத்தால் பொறுத்தபடியே நடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அடியிலும் அவன் எழுத்துலகிலிருந்து கடத்தப்படுவதாய் உணர்ந்தான் முணுமுணுத்துக் கொண்டான்.

"இந்த விளக்கங் குறைஞ்ச மோட்டுக் கூட்டத்துக்கு எனி ஒண்டுமே எழுதுறேல்லை!!!!"

வணக்கத்திலும் தமிழிலும் தரமான படைப்புக்கள் வரவேண்டும் என விரும்புகிற, விழைகிற அனைத்து நெஞ்சங்களுக்கும் இச்சிறுகதை சமர்ப்பணம்.

**************************************

- சதுரன் -

எத்தனை துன்பம் வரினும்
இன்பம் வரினும் -
எதையும் வாழ்வின் ஒரு கட்டம் என்றே எண்ணி
வாழ்க்கையை வாழ்" என்றான் அவன்

இன்பம் வருகையில் சரி......
துன்பம் வருகையில் எப்படி???" என்றேன் நான்

இன்பம் வருகையில் சிரிப்பை குறைத்துக் கொள்
துன்பம் வருகையில் கண்ணீரும் குறையும் என்றான் அவன்

சரியென்று சொல்லிவிட்டு -
அவ்வப்பொழுது கண்களை துடைத்துக் கொள்கிறேன் நான்!!!!!!!!!

சிரிப்பு - வெகுதூரத்தில் தெரிந்தது..

வித்யாசாகர்

## உன்ட பேரை எங்கை பாவிக்க

ஊரில ஆற்ற பிள்ளை என்று கேட்டா
உன்ட பேரை பாவிக்கிறது இல்லை
பாவிச்சா ஆருக்கும் தெரியாது
விண்ணப் பங்களிலும் கேட்பதில்லை
உன் பெயர்
ஆனால் உன்னை ஒத்தவர்களுக்கு
கவிதை எழுதுபவர்கள் அதிகம்



மனதிலே ஒப்பற்ற இடம் உனக்கு .
ஆனால் உன்ட பேரை பாவிக்க முயல்லை.
மின்னஞ்சல் தனி நபர் கணக்குகளிலும்
கேட்கப்படுவதில்லை உன் பெயர்.

பாவிச்சே ஆகோணும் எண்டு
உறுத்தியது மனசு
கையெழுத்திலும் கடவுச் சொல்லிலும்
உன் பெயரை நான்
பாவிக்கிறன் அம்மா .....

## மரபுவழிப்படா இயல்புகள் தெய்வங்களிடைச்சமர்

நீ வணங்கிய தெய்வங்களும்
நான் வணங்கும் தெய்வங்களும்
சண்டையிட ஆரம்பித்தன...
நோக்கமும் பின்புலமும் அறியாமல்
நீயும் நானும் பார்வையாளர்களாய்
போர்க்களத்தின் எதிர்முனைகளில்...



வானத்தைப் பார்த்து நான் குறி சொன்னேன்
வெற்றி என் பக்கம் என...
காற்றினைப் பார்த்து நீ சொன்னாய்
அது உன்பக்கம் என...
எனபக்கம் கை உயர்வதாகக் கருதிக்கொண்ட
பொழுதுகளில் புழுதிதட்டி ஆர்ப்பரித்த...

S.Mathurahan
Faculty of Medicine
University of Colombo
mathurahan@gmail.com

# மௌன வலிகள்

பயணங்கள் இன்னும் முடியாத
இந்த வாழ்க்கைப் பாதை....
அந்த அந்திப் பொழுதின்
மெதுவான மாற்றங்களை
மெல்ல உணரும் என் சாலை..

தூரத்தில் வருவது அவளா?
ஆம்! அவளே தான்!
என் இதயப் பூவைப் பறித்து
மாலையாக சூடிக் கொண்டவள்!!
என் வானத்து தீப்பொறி
சூரியன்தான் என்று சொன்னவள்!

என் நிழலுக்குள் தன் விம்பங்களைத்
தொலைத்தவள்!!
தன் முகக் கண்ணாடியாக
என் கண்களைக் கருதியவள்!!
ஆம்!அவளேதான்!

வருவது அவளேதான்!
மனதிற்குள் ஆயிரம் மௌன யுத்தங்கள்!
அவளின் பார்வை என் மீது படுகின்றது..
ஆ! அந்தப் பார்வையின் வெப்பம்
என்னை நெருப்பாய்ச் சுடுகின்றது!
இதயத்தின் துடிப்பை காதுகள்
உணரத் தொடங்குகின்றன..
கண்களில் சிறிதாக வடியும் நீர்த்துளியை
மெல்ல மறைக்கிறது மழைத்துளி!!
இயற்கை நான் அழுவதை விரும்பவில்லை..
அவளோடு நடந்து சென்ற அதே சாலையில்
தூறிய முதல் மழை!...
இன்றும் அதே மழை! ஆனால்
இறுதி மழை!..
நான் அழுவதையும் அறிய முடியாமல்
அவள் கடந்து செல்கிறாள்!
இனி இந்த நேர்கோடுகள்
எங்கும் சந்திக்காது!!!!!!!!!
இனி எந்த வட்டங்களுக்குள்ளும்
நின்று சிந்திக்காது!!!
என் கடந்த காலத்தை ஒரு
பார்வைக்குள் நுழைத்து விட்டவளே!
என் இருபது வருடங்களை
நொடிக்குள் மடித்து சுருட்டியவளே!
ஒரு வார்த்தை! ஒரே ஒரு வார்த்தை!
என் இதயத்தில் இருந்து....

இந்த மௌன வலிகள்
உன் மகனுக்கும் வராமல் பார்த்துக் கொள்!.......

அ.ஹரிஷன்
கொழும்பு பல்கலைக்கழகம்

# கானலாய் போன காதல்....!

கண்ணே உன் பார்த்ததும்
கண் முன்னே தோன்றியது
நீ தான் என்
முதல் என்று
ஆனால் இன்று காலம்
சொல்லியது அவளே உன்
முடிவென்று .......

காதல் என்பதெனக்கு
கண்மணி நீ காட்டியது
கலங்கும் என் இதயத்தோடு
கானல் நீ மூட்டியது ....

காலத்தின் கோலத்தால்
காதல் கானலாகியது
கனவிலும் என் கண்கள்
கண்ணே உன்னை தேடியது ...

இன்று வரை வாழ்கின்றேன்
இருதயத்தில் உன்னோடு
இப்போதாவது காதலிருந்தால்
வந்துவிடு என்னோடு ......

உன் நினைவுப் பூக்கள்
உதிர்வதற்ககிடையில்
காதல் காயம்
ஆறுவதற்கிடையில்
காலங்கள் போகின்றன ...கானல் நீராக

இன்று எனக்கோ காதல்
வீணாய் போன தேடல்
விலையுயர்ந்த சீப்பு
விதண்டாவாதம்
நிம்மதியின் தொலைப்பு
நிரந்தர கண்ணீர்
காலங்கள் சொல்லட்டும்
என் கானலாய் போன
காதலை ........

S.Athavan
Faculty of Engineering
University of Moratuwa

# குழந்தை வளர்ப்பு குறித்த பொதுவான டிப்ஸ்....



"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே-பின்பு நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே"

எவ்வளவு சத்தியமான வார்த்தைகள். குழந்தை வளர்ப்பு என்பது தனிக்கலை. ஒவ்வொரு குழந்தையும் இந்த உலகத்தில் பிறக்கக் கடவுள் தேர்ந்தெடுத்த கருவிகள் தான் பெற்றோர். உயிராகி, கருவாகி, உருவாகி, பிள்ளைக்கனியமுதாய்ப் பிறந்து,முகம் பார்த்து சிரித்து, தவழ்ந்து,விழுந்து நடந்து, பிஞ்சுப் பாதத்தால் அழகு நடை நடந்து, ஓடி, சிரித்து, அழுது, பேசி ஒவ்வொரு பருவத்தைக் கடந்து வரும் குழந்தைகள் உலகமே தனி. வாழ்க்கையில் எல்லாமே அவர்களுக்குப் புதியது. நாம் தான் எல்லாம் கற்றுத் தர வேண்டும். குழந்தைகளுக்கும் மனம், உணர்வுகள், விருப்பு-வெறுப்புகள் உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது. பொதுவாக நம் எண்ணங்களே செயலாகின்றது செயலே பழக்கமாகின்றது பழக்கமே வழக்கமாகின்றது வழக்கமே ஒழுக்கம் ஆகின்றது தனிமனித ஒழுக்கமே பண்பாடு ஆகின்றது. பண்பட்ட குழந்தைகளை உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களாகிய நம்மிடம் தான் இருக்கிறது. அதுவும் குழந்தைகளின் இளமைப்பருவத்தில் நாம் விதைக்கும் விதையே விருட்ஷமாகி நல்ல குடிமகனாக உருவாக வாய்ப்பாகின்றது. குழந்தை தானே என்று அசட்டையாக எண்ணாமல் வளர்ப்பில் கவனம் செலுத்தினால் நம் குடும்பத்திற்கு மட்டுமில்லாமல் நாட்டிற்கே நற்பிள்ளையாகத் திகழ்வான். பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்திருக்கும் குழந்தைகளின் வளர்ப்பு குறித்த பொதுவான முறைகளை இங்கே பகிர்ந்துள்ளேன்.



## வீட்டில் குழந்தைகள்

- எந்த வயது குழந்தையையும் திட்டவோ அடிக்கவோ கூடாது. உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ துன்புறுத்தக் கூடாது.
- சிறுசிறு வேலைகளை இளமைக் காலத்திலிருந்தே குழந்தைகளுக்குப் பழக்க வேண்டும்.
- குழந்தைகள் எதிரில் பெரியவர்கள் சண்டை போடக் கூடாது. அது மனரீதியாகக் குழந்தைகளைப் பாதிக்கும்.
- எந்தக் குழந்தையுடனும் உங்கள் குழந்தையைத் தொடர்புபடுத்திப் பேசாதீர்கள். அது குழந்தைகள் மனதில் ஏக்கத்தையும் தாழ்வுமனப்பான்மையையும் விதைத்து விடும்.
- குழந்தைகள் எதிரில் பெரியவர்களை மரியாதை குறைவாகப் பேசக்கூடாது.
- எல்லாருடைய நல்ல குணங்களை மட்டுமே குழந்தைகள் எதிரில் பேச வேண்டும். யாரையும் தாழ்த்திப் பேசக் கூடாது.
- குழந்தைகளுக்கும் விருந்தோம்பலைக் கற்றுத் தர வேண்டும்.
- பிள்ளைகளின் வேலைகளை அவர்களே செய்யப் பழக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகமாவதுடன் நமக்கும் வேலைப்பளு குறையும்.
- குழந்தைகளுக்கு உறவுகளின் அருமையையும் விட்டுக் கொடுத்தலையும் புரிய வைக்க வேண்டும்.
- ஆபத்தை விளைவிக்கும் எந்தப் பொருளையும் குழந்தைகள் கைக்கு எட்டும் தூரத்தில் வைக்கக் கூடாது.



## பள்ளியில் பிள்ளைகள்

- குழந்தைகளைப் பயமுறுத்தி வளர்க்கக் கூடாது. அதிலும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்துள்ள, குறும்புகள் அதிகம் செய்யும் குழந்தையிடம், "ரொம்ப சேட்டை பண்ணினேனா ஸ்கூல்ல கொண்டு தள்ளிடுவேன், ராகினி மிஸ்கிட்டே நல்லா நாலு அடி கொடுக்கச் சொல்றேன்" என்று கூறக் கூடாது. அப்படி செய்தால் பள்ளிக்கூடம் ஏதோ பயமுறுத்தும் இடம் போலும் ஆசிரியர்கள் துன்புறுத்துபவர்கள் போலவும் குழந்தைகள் மனதில் பதிந்து விடும். அதற்குப் பதில் "நீ படிச்சு பெரிய ஆளாகணும், டீச்சர்ஸ் எல்லாம் ரொம்ப அன்பானவங்க, மாதா பிதா குரு தெய்வம்னு சொல்வாங்க. குருனா அது உன் டீச்சர் தான், உன்னைப் பெரிய ஆளாக்குறதுல அவங்க பங்கு தான் அதிகம்" என்று பள்ளிக்கூடத்தையும் ஆசிரியர்களையும் இனிமையானவர் -களாகக் காட்ட வேண்டும்.

- பிள்ளைகள் வகுப்பில் பின்தங்கி இருந்தால் அவர்களை அன்புடன் அணுகி புரியாத பாடங்களைச் சொல்லித் தர வேண்டும். மிரட்டக்கூடாது.

- பிள்ளைகள் தங்களைத் தவிர வேற்று மனிதர்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்ற விழிப்புணர்வைத் தர வேண்டும்.

- பிள்ளைகள் மற்ற சக மாணவர்களுடன் போட்டி போடும் போது அது ஆரோக்கியமான போட்டியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

- பிள்ளைகளின் படிப்பு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றை அடிக்கடி ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

- குழந்தையின் பள்ளிப் பையில் நம் வீட்டு விலாசம், தொலைபேசி எண் அடங்கிய கார்டை வைத்து விட வேண்டும். ஒருவேளை குழந்தைகள் காணாமல் போனாலும் விலாசம் இருப்பதால் குழந்தை பத்திரமாக வந்து சேரும்.

- பெற்றோரைத் தவிர வேறு முகம் தெரியாத நபர்கள் அழைத்தால் செல்லக் கூடாது என்று குழந்தைகளிடம் சொல்லி வைக்க வேண்டும்.

- பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்குத் தங்க நகைகள் அணிவித்து அனுப்பக் கூடாது.

- பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்படும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும், தற்காத்துக் கொள்ள வேண்டும் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

- சக மாணவர்களுடன் அன்பும் நட்பும் பாராட்டும்படி செய்ய வேண்டும்.



## குழந்தைகளும் கல்வியும்

- பிள்ளைகள் பள்ளிக்கூடப்பாடம் செய்து கொண்டிருக்கும் வேளைகளில் கண்டிப்பாக தொலைக்காட்சி பார்க்கக் கூடாது.

- பிள்ளைகள் படிக்கும் போது நாமும் அவர்களோடு அமர்ந்து ஏதேனும் புத்தகங்கள் படிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் குழந்தைகளின் கவனமும் சிதறாது. படிக்கும் ஆர்வமும் அதிகமாகும்.

- பிள்ளைகளை அதிக நேரம் தொலைக்காட்சியைப் பார்க்க விடக் கூடாது. அதற்குப் பதில் அருகில் உள்ள நூலகத்திற்கு அழைத்துச் சென்று நூல்கள் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தலாம்.

- கோடை விடுமுறையில் குழந்தைகளைச் சிறப்பு வகுப்புகளுக்கு அனுப்புவது சரிதான். ஆனால் ஒரே நேரத்தில் கராத்தே,பாட்டு, நடனம், யோகா என்று பலவித வகுப்புகளுக்கு அனுப்பும் போது குழந்தைகள் எதிலும் ஜொலிக்காமல் சோர்வடையக் கூடும். எனவே, குழந்தைகளுக்குப் பிடித்த ஏதேனும் ஒரு சில வகுப்புகளில் மட்டும் சேர்த்து விடலாம்.

- "காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு" என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கேற்ப மாலை வேளைகளிலே குழந்தைகளை விளையாடவும் விட வேண்டும்.

- அழகான ரோஜாவில் முட்களா? என்று சிந்திப்பது எதிர்மறை சிந்தனை, முட்களில் இத்தனை அழகான ரோஜாவா? என்பது ஆக்கப்பூர்வமான சிந்தனை. எனவே ஆக்கப்பூர்வமான சிந்தனைகளைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும்.

- பிள்ளைகளை ஒரு பொருளை எடுத்தால் எடுத்த இடத்தில் வைக்கப் பழக்க வேண்டும். காலை நேரப் பரபரப்பில், எங்கே பாக்ஸ் எங்கே என்று பதட்டப்படத் தேவையில்லை.

- மனிதாபிமானம், அடுத்தவருக்கு உதவும் குணம் போன்றவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். நாட்டுப்பற்றை ஊட்ட வேண்டும்.

- நம் கோபம், அவசரம், பதட்டம் என்று எதனையும் குழந்தைகளிடம் காட்டக் கூடாது.

- குழந்தைகளிடம் பொறுமையும் கனிவும் மிகவும் முக்கியம்.

## குழந்தைகளின் உணவும் ஆரோக்கியமும்



- சுத்தம், சுகாதாரம், சத்துள்ள ஆகாரம் ஆகிய மூன்றும் உடல் ஆரோக்கியத்தின் அடிப்படை என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.

- பிள்ளைகள் தங்கள் அறையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளப் பழக்க வேண்டும்.

- சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைகளைக் கத்தியோ துன்புறுத்தியோ உண்ண வைக்காமல் சிறிது விட்டுப் பிடிக்கலாம்.

- ஒரே மாதிரி சமைக்காமல் குழந்தை -களுக்கு கேரட், பீட்ரூட் போன்ற விதவித வண்ண உணவுகளைச் சமைத்துத் தர வேண்டும். உணவை அவர்களுக்குப் பிடித்ததாக்க வேண்டும். உதாரணத்திற்கு ஏ, பி, சி போன்ற வடிவங்களில் தோசை வார்த்துத் தரலாம்.

- பாதாம்பருப்பைப் பொடித்து பாலில் கலந்து வாரத்திற்கு மூன்று முறை பிள்ளைகளுக்குக் கொடுத்து வர, அவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். கேரட்டைத் துருவி தேனில் கலந்து கொடுத்தாலும் புத்திக்கூர்மை ஏற்படும்.

- தினம் ஒரு காய், ஒரு பழம் உண்ணும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே ஏற்படுத்த வேண்டும்.

- கொழுப்புச் சத்து அதிகம் இருக்கும் உணவுகள், செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்கள். உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நொறுக்குத் தீனிகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்துப் பழக்கக் கூடாது.

- தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே குழந்தைகள் உணவு உண்ணும் பழக்கத்தை ஊக்கப்படுத்தக்கூடாது.

- உணவின் அருமையைக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுக்குச் சத்துள்ள ஆகாரங்களைக் கண்டிப்பாகத் தர வேண்டும். உண்ண மறுத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு எந்த விதமான உடல்-மன ரீதியான பிரச்சினைகள் ஏற்படின் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

## குழந்தைகளும் சேமிப்புப்பழக்கமும்



- பிள்ளைகளுக்குப் பணத்தின் அருமையை இளம் வயதிலிருந்தே உணர்த்த வேண்டும்.
- பிள்ளைகளுக்குச் சேமிக்கும் பழக்கத்தை சிறு வயதிலேயே ஏற்படுத்த வேண்டும்.
- பெரியவர்கள் குழந்தைகளுக்குப் பண்டிகை காலங்களில் தரும் பணத்தை உண்டியலில் அவர்கள் கையாலேயே போட்டு வரச் செய்ய வேண்டும், பணம் சேர்ந்தவுடன் அவர்கள் நீண்ட நாட்களாக ஆசைப்பட்ட பொருளை வாங்கித் தரலாம். அவர்களுக்குச் சேமிப்பின் அருமை தெரிவதுடன் தன் உழைப்பில் வாங்கிய பொருள் என்று மகிழ்ச்சியாக இருக்கும்.
- குழந்தை ஆசைப்படுகின்ற எல்லாப் பொருளையும் வாங்கித் தர வேண்டிய அவசியமில்லை. எது தேவையோ அதைத் தவிர மற்றவற்றைக் குழந்தையின் அடத்திற்காக வாங்கித் தரக் கூடாது. குழந்தைக்குச் சிறு சிறு ஏமாற்றங்களும் கிடைத்தால் தான் பிற்காலத்தில் எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் பணத்தின் மதிப்பும் தெரியும்.
- செலவிற்குப் பணம் என்று தனியாகப் பிள்ளைகள் கையில் பணத்தைப் புரள விடக் கூடாது.

## குழந்தைகளின் வெற்றி-தோல்வி




- பிள்ளைகளின் எண்ணங்கள், கருத்துக் -களைச் செவி கொடுத்துக் கேளுங்கள். அவர்களின் உணர்விற்கும் மதிப்பு கொடுங்கள்.
- பிள்ளைகளின் மேல் உங்கள் தனிப்பட்ட ஆசைகளைத் திணிக்காமல் அவர்களின் ஆர்வம் எதில் இருக்கிறதோ அதைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துங்கள். பல்வேறு போட்டிகளில் சேரச் சொல்லுங்கள்.
- பிள்ளைகள் செய்யும் நல்ல விஷயங்களையும் மனம் திறந்து பாராட்டுங்கள். ஒவ்வொரு முறை பாராட்டுவாங்குவதற்காகவே நல்ல பழக்கங்களை மேற்கொள்ளுவார்கள்.
- வெற்றியானாலும் சரி, தோல்வி கிடைத்தாலும் சரி, எல்லாமே வாழ்க்கையின் அங்கங்கள் என்பதைப் புரிய வையுங்கள்.
- பிள்ளைகள் நல்ல விஷயங்கள் செய்தாலும், நல்ல மதிப்பெண்கள் வாங்கினாலும், போட்டியில் வெற்றி பெற்று வந்தாலும் ஏதேனும் பரிசுப் பொருள் வாங்கிக் கொடுத்து உங்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பிள்ளைகள் எந்த விஷயத்திலாவது தோல்வியடைந்தால் திட்டாமலும் சோகத்தை வெளிக்காட்டாமலும் அடுத்த முறை வெல்லலாம் என்று ஊக்கப்படுத்துங்கள்.
- குழந்தைகளைப் பெருமையாக மற்றவர்களிடம் கூறுங்கள். உங்கள் ஊக்கமும் உற்சாகமும் குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைக்கும்.
- ஆண் என்றால் உயர்ந்தவர், பெண் என்றால் தாழ்ந்தவர் என்ற பேதத்தையோ சாதியையோ பிள்ளைகள் மனதில் விதைக்கக் கூடாது.
- நாம் எப்படி நடக்கிறோமோ அது போலவே தான் பிள்ளைகளும் நம்மைப் பின்பற்றுவார்கள். எனவே பிள்ளைகள் எதிரில் பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டும்.
- குழந்தை வளர்ப்பில் தந்தை-தாய் இருவருக்கும் சரி பங்கு இருக்கிறது. பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்றால் மட்டும் பெருமையில்லை. இளமையிலே அவர்களுக்கு ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கைக் கல்வியையும் தர வேண்டும்

Sailujan
Sailu@jaffnamidtown.org

# நான் என்ன இளிச்சவாயா .....

5 வயதில் Montessori யில் குழப்படி
பெடியன் எவ்வளவு என்றால்
என்ர drinks ஐ எடுத்து விழுங்கிவிடுவான்
சகமாணவர் பெரிய ஆண்டியிடம் (அதிபர்)
முறையிடும் போது தான் எனக்கு
விளங்கும் என்ர drinks ற்கு என்ன
நடந்தது என! நான் என்ன இ.வாயா?..





தரம் 2ல்
அடிமட்டத்தை உடைத்துவிட்டேன்!
அதற்கு பிறகும் அன்பா பேசினா வம்பா
மாட்டிவிட்டாள் புது அடிமட்டம் வேண்டி
கொடு ஆசிரியர் கட்டளைநான்
இன்னும் கொடுக்கவே இல்லையே? நான்
என்ன இ.வாயா?..

தரம் 4ல்
புது Nail polish அடிச்சு style காட்டி
பல தடவை ஆய்க்கினைக்குப்பின்
அவளுக்கு கொடுத்து ஆசிரியரிடம்
மாட்டுப்பட்டோம் உடனே தோசையை
திருப்பி என் தலையில் போட்டு விட்டாள்
எது எப்பிடியோ அன்று பறிமுதல்
செய்யப்பட்ட என் Nail polish இன்னுமே
எனக்கு கிடைக்கவில்லை




தரம் 11ல்
ஏப்ரல் மாதம் 40 நாட்கள் பள்ளிகூடம்
விடுமுறை
திங்கள் புதன் வெள்ளி English extra
class
அதில வேற வாத்தியார் Register mark
பண்ணிற்றார்
பள்ளிகூடம் தொடங்கின பிறகு
எனக்கு நடந்த சங்கராந்திக்கு
குறையில்ல
இவ்வளத்தோட விட்டிச்சா மனுசன்
எல்லாத்துக்கும் மகுடம் வச்சமாதிரி என்ர
O/L Results வந்திச்சு
April 1st அன்று
இந்திராபிரியதர்சினி க்கு 10A யாம்
எல்லோரும் திகைத்து நிற்க April
Fooooooooooooooool ஆம்
வேல மினக்கட்டு O/L க்கு 10A எடுக்க
நான் என்ன இ.வாயா?..







அப்பா தப்பிற்றம் எண்டு வந்ததுக்கு பிறகு
தானே........... கச்சேரி தொடங்கிச்சு
ஒவ்வொருத்தியா வாத்தியார் கேட்டார்
இந்த சோதினைக்கு எத்தினை Marks
எடுக்கலாம் என்று
எல்லோருமே 50 எண்டு சொல்ல நான்
அரியாத்தை அதுதான்
முந்தி சுளகால யானையை துரத்தினவவின்ர
பேத்தி தானே
40 எண்டு வீரமா சொன்னன்..... வெளியில போ
எண்டார்
எங்கட வாத்தியாரும் நல்லா நொந்து
போய்ற்றார் போல
அதுக்கு பிறகு Marks ஐ பற்றி வாயே
திறக்கிறதில்ல
சும்மா பம்மாத்து வெருட்டுக்கெல்லாம் பயப்பிட
நான் என்ன இ.வாயா?..

தரம் 13ல்
Final Exam ற்கு ஏறத்தாழ 3 மாதங்கள் முன்னர்
டென்சன பற்றி சொல்லி வேலயில்ல அதிலயும்
குமரன் Sir வகுப்பில கேள்வி கேட்டா?.. விடை
சொல்லாட்டி?.
கௌரவ பிரச்சனையள் வேற பச்சை சட்டை நீ
சொல்லடி
என்னத்தான் கேக்கிறாரோ................ எண்ட
Doubt ல மெள்ள பார்த்தன்
யாரு பச்சை சட்டை போட்டிட்டு வந்த
வெங்காயம் நான் இல்லதா.....னே...

நான் செய்ததை அப்பிடியே 1000 மடங்கு
பெரிதாக்கியும்
செய்துகாட்டியும் போட்டார்
ஊரே சிரிச்சிச்சு
அப்பத்தான் உறைச்சிது மரமண்டையில
எல்லாம்
முடிய Sir கேட்டார் என்ன நினைவிலயடி
வெளிக்கிட்டு வாற நீ அப்பதான் யோசிச்சன்
நான் என்ன இ.வாயா....






பல்கலையில்
நண்பகல் 12 மணிக்கு அண்ணாமாரின்ர Appoint-
ment
நல்லா சீவியிருக்கிற ஆப்பில போய் குந்தற நிலமை
சரியா 2 மணிக்கு English lectures ற்கு போய்
வசமா மாட்டுப்பட்டன் குண்டர் கூட்டத்திட்ட
இண்டக்கு நீ 6 மணிக்கு தான் வீட்ட போவ
கட்டையில போறவன் சொன்னான்
முந்தியும் ஒருநாள் அவனுக்கு சுத்திற்று போன
ஆத்திரம் அவனுக்கு
ஐயோ துலைஞ்சன்!!!!
என்டிருக்க இன்னொருத்தன் வந்து தன்ர பங்குக்கு
வெருட்டினான்
என்ன அதிசயம் ! குண்டர் குழாம் அதிருப்தியுடன்
வெளியேற்றம்
நீங்க வைகுந்தன்ர தங்கச்சிதானே - ஓம்
நான் வைகுந்தன்ர Friend அப்பத்தான் போன உயிர்
திரும்பி வந்திச்சு
ஓ நீங்க தான் தினேஷ் அண்ணாவா (ஓ.... இதுதான்
அனா...... வா......)
இந்து Escape
அடுத்த நாள் ஒருத்தர் தினேஷ் அண்ணா உனக்கு
சொந்தமா- இல்லை
உண்மையை தான் சொன்னன் திட்டினாங்கள் ஐயா-
ஓம்
தூரத்து சொந்தம் பொய் சொன்னன் நம்பீற்றாங்கள்
Ragging ல மாட்டுப்பட
நான் என்ன இ.வாயா?...



A/L ற்கு பிறகு
நானே மூட்டை மூட்டையா வண்டில் விடுவன
எனக்கே call பண்ணி நானும் campus enter
பண்ணியிருக்கிறன்
இந்திராபிரியதர்சினி அக்காவோட கதைக்கலாமோவாம்
தம்பி! இது வடலி அடைப்பு நானும் ரீச்சர் தான்
ஆனா அப்பிடி ஒருத்தரும் இங்கின இல்ல
Sorry அன்ரி sorry அன்ரியாம்
நான் என்ன இ.வாயா?..

இந்து
Faculty of Engineering
University of Moratuwa

# மட்டக்களப்பு

இலங்கையில் தமிழர் பாரம்பரியமாக வாழ்கின்ற பிரதேசங்களில் மட்டக்களப்புப் பிரதேசமும் ஒன்று. தனக்கெனத் தனித்துவமான சமூகமைப்பினையும் பண்பாட்டம்சங்களையும் இது கொண்டுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இது மிகத்தொலைவில் அமைந்திருப்பதும் ஆகம வழிபாட்டம்சங்கள் இங்கு அதிகளவு அறிமுகமாகாமல் இருப்பதும் மிஷனறிமார்களின் ஆங்கிலக்கல்வி மயமாக்கல் இங்கு அதிகளவு செயற்படாமையும் நவீனவர்களுமிங்கு பெரியளவில் உருவாகாமையும் இத்தனித்துவம் பேணப்படுவதற்கான காரணங்கள் ஆகும்.

ஓர் இனத்தின் புராதான பண்பாடுகளை அறியவிரும்பும் மானிடவியலாளர்கள் அவ்வினத்தின் பின்தங்கிய பிரதேசங்களையும், புராதான மனித குழுக்களையும் நாடுவர். இவ்வகையில் ஈழத்தமிழரின் புராதன பண்பாடுகளையும், தனித்துவமிக்க கலாச்சார அம்சங்களையும் ஆராய விரும்பும் ஆராய்வாளர்களிற்கு மட்டக்களப்பு ஒரு முக்கிய களப்பிரதேசமாகும். தமிழர் வாழ்கின்ற வட பிரதேசம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கலாச்சார மாற்றங்களிற்குட்பட்டுவிட்டதனால் தமிழரின் புராதன அம்சங்களை மூல வடிவில் இங்கு காண்பது மிக அருந்தலாக உள்ளது. இந் நிலையில் மட்டக்களப்புப் பிரதேசமும் தமிழர் கலாச்சார ஆய்வுக்குரிய பிரதேசமாக மாறுதல் இயல்பே.

மட்டக்களப்பென்பது இலங்கையின் கிழக்குப் பிரதேசத்திலுள்ள ஒரு வாவியின் பெயர். காலப்போக்கில் இப்பெயர் இவ் வாவியின் மத்தியில் அமைந்துள்ள நகரத்தின் பெயராகவும் பின் இவ்வாவியினை தன்னகத்தே கொண்ட மாவட்டத்தின் பெயராகவும் வழங்கி வரலாயிற்று. இம் மட்டக்களப்பு மாவட்டம் 1961ம் ஆண்டு முதல் சிறிதாக்கப்பட்டுள்ளது. அதற்கு முன் இம் மாவட்டம் அம்பாறை மாவட்டத்தையும் தன்னகத்தே கொண்டதாக இருந்தது. இதற்கு வடக்கே வெருகல் கங்கையும் தெற்கே குமுக்கனாறும் கிழக்கே இந்துமாக்கடலும் மேற்கே மத்திய மலைநாட்டுக் -குன்றுகளும் எல்லைகளாக அமைந்திருந்தன. காடும் களனியும் நிறைந்த இம்மாவட்டத்தில் இடையிடையே சிறிதும் பெரிதுமான களப்புக்கள் காணப்படுகின்றன. 135 மைல் நீளக்கடற்கரை இம்மாவட்ட நெய்தல் பாங்கினை எடுத்துக்காட்டுகின்றது. மேற்கு எல்லையில் காணப்படும் குன்றுகளும் அவற்றின் சூழலும் குறிஞ்சி நிலப்பாங்கினை கொண்டவை. இவ்வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலப்பாங்குகளும் இம் மாநிலத்திற்கு சிறப்பூட்டுகின்றன. இம்மாவட்டத்தின் வரலாறு தெளிவற்றதெனினும் தொன்மையானது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கற்கால சான்றுகள் பல இம் மாவட்டத்திலும் சாரல்களிலும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றோடு இதுவரை கண்டெடுத்த கல்வெட்டுகளும் வரலாற்று சான்றுகளாக அமையத்தக்கன. மட்டக்களப்பு மான்மியம் முதலிய இலக்கியச்சான்றுகளும் வேறு பல வரலாற்றுப்பாடல்களும் நாட்டார் இலக்கியங்களும், கலைகளும் வழிபாட்டு முறைகளும், கர்ண பரம்பரைக்கதைகளும் பிறவும்




இம்மாநிலத்தின் பண்டைய நிலையை நாம் ஓரளவு அறிந்து கொள்ள உதவுகின்றன. எடுத்துவரும் இன்றைய பல்வேறு முயற்சிகளும் இங்கு நினைவு கூறத்தக்கன. இவற்றை -யெல்லாம் கொண்டு இம்மாவட்டத்தின் வரலாற்றினைத் துலக்க பண்டைய காலத்தில் நாகரும் இயக்கரும் இம்மாநிலத்தில் ஆங்காங்கே வாழ்ந்து வந்துள்ளனர். மட்டக்களப்பு மான்மியமும் இவ்வினத்தவர்கள் பற்றி இடையிடையே குறிப்பிட்டுள்ளனர் எனினும் இவ்விரு

இனங்களையும் தெளிவாக தெரிந்து கொள்வது சற்றுக்கடினமாக உள்ளது. அண்மைக்கால ஆய்வாளர்கள் ஆரியர் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்களை ஆதித்திராவிடர்கள் என்றும், ஒஸ்ரலோயிற் பழங்குடிகள் என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்விரு இனத்தவருமே மட்டக்களப்பு மண்ணில் வாழ்ந்த பழங்குடிகள் எனலாம். பௌத்தம் இலங்கைக்கு வந்த போது இவ்விரு இனத்தவர்களினதும் ஆட்சிப்பீடங்கள் இங்கிருந்தன என்பதற்கு மகாவம்சத்தகவல்கள் சான்று தருகின்றன. மேலும் இவ்விரு இனங்களினதும் வழிபாட்டு முறைகள் இன்றும் தொடர்வது அவதானிக்கத்தக்கது. இவர்களுள் ஒஸ்ரலோயிற் மக்களினது வழிபாட்டு முறைகள், வேறு வாழ்கை விழுமியங்கள் சிலவும் நிலைத்திருந்தாலும் இவ்வினம் தெற்காசிய அரங்கிலிருந்து முற்றிலும் மறைந்து விட்டது எனலாம். ஆதித்திராவிடர்களை பொறுத்தமட்டில் பண்டைய இலங்கையின் தென்பகுதியில் இவர்களது செல்வாக்கு பெரிதும் காணப்பட்டது. பௌத்தம் இலங்கைக்கு வரமுன்பிருந்தே தமிழ் நாட்டிற்கும் இலங்கையின் தென்பகுதிக்கும் நெருங்கிய வர்த்தகத்தொடர்பு இருந்து வந்துள்ளது. இப்பிரதேசத்திலிருந்த உருகுணை இராட்சியத்தில் தமிழர் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. இவ் வகையில் பண்டைய மட்டக்களப்பின் எல்லை வடக்கே பொலநறுவை முதல் தெற்கே கதிர்காமம் வரை விரிந்திருந்ததெனலாம். தமிழரின் விரிந்த இச்செல்வாக்கினை ஐரோப்பியராட்சி வரை அவதானிக்கமுடிகின்றது. மேலும் இடையிடையே இந்தியாவிலிருந்து வந்த குடியேற்றங்கள் இச்செல்வாக்கிற்கு மேலும் வலுவூட்டுவனவாயிற்று. சில சந்தர்ப்பங்களில் வேறு மொழி பேசியவர்கள் இங்கு வந்து குடியேறினாலும் குறுங்காலத்தில் தமிழ் மொழி மயப்பட்டனர். இவற்றாலெல்லாம் மட்டக்களப்புப் பண்பாடு பண்டுபரவியானது என்பதோடு இடையிடையே புதியவர்கள் புகுந்ததனால் சிறுசிறு மாற்றங்களிற்குட்பட்டு வந்தது ஊரும் வளவும்.

மட்டக்களப்பு மாவட்டம் இயற்கை எழில்மிக்க பல ஊர்களை தன்னகத்தே கொண்டது. இவ்வூர்களிற்கிடையே ஆங்காங்கு காடுகளும். களனிகளும், குளங்கள், நீரோடை, சதுப்பு நிலங்களும் பிறவும் இவ்வூர்களின் இயற்கை வளத்திற்கு பொலிவூட்டுவனவாக உள்ளன இவ்வூர்கள் இயற்கையினால் பிரிந்தவை என்பதோடு மனிதச் சமூகப்பிரிவுகளினாலும் தனித்து -வமானவையாக இருப்பதை அவதானிக்கலாம். இம் மாவட்டத்தில் 15ம் 16ம் நூற்றாண்டுகளைத் தொடர்ந்து இஸ்லாமியக் குடியேற்றங்கள் அதிகரிக்கத் தொடங்கியது. போர்த்துக்கீச வர்த்தக ஏகபோக ஆதிக்கமும், கண்டி மன்னர் அனுசரணையும் முக்குகர் எனும் சாதியினரின் நட்பும்



மட்டக்களப்பில் இவ் இஸ்லாமிய குடியேற்றத்தை பெரிதும் ஊக்குவிப்பனவாக அமைந்தன. இதனால் குறுகிய காலத்திலே கூடிய இஸ்லாமிய ஊர்கள் உருவாகத்தொடங்கின. இவ்வாறு தோன்றிய இஸ்லாமிய ஊர்கள் தமிழ்க்கிராமங்கள் மத்தியில் அமைந்திருப்பது இங்கிருந்த சமூக ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

முன்பு நீறு சாந்தாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலத்தில் கட்டப்பட்ட வீடுகளில் திண்ணை முக்கியமானதாக காணப்பட்டன. வீட்டிற்கு முன்னும் பின்னும் திண்ணைகள் காணப்பட்டன. வீட்டின் பின்புறத்திண்ணையின் இரு மருங்கிலும் இரு கொட்டறைகள் இருந்தன. இவ்வறைகள் வளிபாட்டறைகளாகவும் களஞ்சிய அறைகளாகவும் இருந்தன. இவ் வீடுகளில் காணப்பட்ட பெரிய அறைகள் கிட்டங்கி அறைகளாக இருந்தன. இவற்றின் கதவுகள் நெல் சொரியக்கூடிய வகையில் மேற்கதவு கீழ்க்கதவு என அமைக்கப்பட்டிருந்தன. முன்னறை கொண்ட இக்கிட்டங்கி வீடுகளின் நடு அறையுள்ளே முன்திண்ணையும், பின்திண்ணையும் தொடர்பு படுத்தும் நடைசாலை காணப்பட்டது. இப்பழமையான வீடுகளின்மேல் மச்சு பரவப்பட்டிருந்தது. இம் மச்சின் மேற்பகுதியும் களஞ்சிய அறையாகக் காணப்பட்டது. இக்கால வீடுகளின் சுவர்கள் ஒன்றரை கல் அகலம் கொண்டனவாக காணப்பட்டன. சில வீடுகளில் வில் வளைவான ஆச்சினையும் காணமுடிகிறது.
வீட்டின் முன் மண்டபம் அமைக்கப் -பட்டால் திண்ணையினதும் மண்டபத்தினதும் வளைகளைத் -தாங்க மரத்தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன.

இவற்றின் நடுவே பீலிகள் பொருத்தப்பட்டிருந்தன. இவற்றை விட சுவாமி விபுலானந்தர் பிறந்ததைப்போல கள்ள அறைகள் கொண்ட வீடுகள் இருந்தன. இத்தகைய பல வகையான கல் வீடுகள் பல கிராமங்களிலும் காணப்பட்டன. மட்டக்களப்பு நகரில் அமைந்த அரசாங்க அதிபரின் வதிவிடம் பிரித்தானிய பாணியில் அமைந்த பழைய ஒரு வீடு எனலாம். இங்கு காணப்பட்ட பழைய கல் வீடுகளில் மரத்தூண்கள், கடைச்சல் வேலை செய்யப்பட்டவை. கதவு நிலைகளும் சிற்ப வேலைப்பாடு கொண்டவை. கதவுகள் தடித்தவை என்பதோடு சிற்ப வேலைப்பாடு கொண்டவை. இக்கட்டிட முறையில் இருந்து இருபதாம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் ஒரு வீடமைப்பு முறை உருவானது. இம்முறை பழைய வீடுகளிலும் சிக்கனமானது. இம்முறையின் கீழே நாற்புறமெல்லாம் கல் வீடாக மாறத்தொடங்கியது. எனினும் ஊர்களிலோ ஆங்காங்கே சில கல் வீடுகளே காணப்பட்டன. பெரும்பாலும் களிமண் வீடுகளே கிராமங்களில் இன்றும் காணப்படுகின்றன.



வீடமைப்பில் முக்கிய நிகழ்வுகள்.
மட்டக்களப்பு வீடமைப்பில் பின்வருவனவற்றை முக்கிய நிகழ்வுகளாகக் கொள்ளலாம். இவை குறித்த வீட்டின் நல்ல எதிர்காலம் வேண்டி இறைவழிபாடு செய்யும் நிகழ்வுகளாகவும் காணப்படுகின்றன. குறித்த நிகழ்வுகள் பின்வருமாறு.

1. வீட்டிற்கு நிலையம் எடுத்தல்
2. கல் வைத்தல் அல்லது கால் நாட்டுதல்
3. முகட்டு வளை வைத்தல்
4. கதவிற்குரிய நிலை வைத்தல்
5. குடிபுகுதல்
6. விளக்கு மறைத்தல்

இவற்றைச் செய்யும் போது சோதிடர் உதவி பெற்று சுபவேளை தெரிந்தெடுத்துச் செய்வர். பொதுவாக மாதங்களுள் வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி என்பனவற்றுள் சுபவேளை தெரிந்தெடுப்பதில் முன்னுரிமை கொடுப்பர். வாரங்களுள் புதன், வியாழன் வெள்ளி ஆகியவற்றுள் இவற்றிற்குரிய சுபவேளை எடுப்பது நல்லதென கருதப்படுகிறது.

இது போல நட்சத்திரம், இராசி, யோகம் கரணம், திதி என்பனவற்றிலும் இந் நிகழ்வுகளைச் செய்வதற்கு எவையெவை நல்லவை என சோதிட நூல்கள் கூறுகின்றன. வீட்டு எஜமானரின் சாதகப்பொருத்தமும் வீடு எந்தப்பக்கம் பார்த்திருக்கிறது என்பதும் இச்சுப வேளைகளைத் தெரிந்தெடுப்பதற்கு முக்கியமாக கவனிக்கப்படும்.

இனி வீட்டிற்கு நிலையம் எடுப்பது பற்றி இங்கு சற்று நோக்குவோம். இந் நிகழ்வினை செய்வதற்கு வளவினை நல்லபடி துப்பரவு செய்து வைத்திருப்பதும் மூலை ஓட்டத்தினை பார்த்து வளவின் எல்லையினை சரியாக அடயாளப்படுத்தியிருப்பதும் முதல் அவசியமானவை. நிலையம் எடுப்பதற்கு சோதிடர் வந்ததும் கற்பூரம் கொழுத்தி விநாயகர் வழிபாடு செய்வர். மேலும் இந் நிகழ்வு நல்லபடி அமையுமா என்பது தொடர்பாக சில முறைகளில் சகுனம் பார்த்து சோதிடர் கருமத்தை தொடர்வதும் உண்டு. இவரிற்கு உதவிக்காக இரு உதவியாளர் தேவை. ஆமலும் கயிறு, அளவு கோல் முளைக்கம்புகள் தேவை. இந் நிகழ்வின் இறுதியில் சோதிடரிற்கு தட்சனை கொடுத்து வழியனுப்பி வைப்பர்.

இந் நிகழ்வின் தொடக்கத்தில் பொங்கல் செய்து வினாயகர் வழிபாடு நிகழ்த்தப்படும். இப்பூசையின் போது வைக்கப்படும் கல்லினை அபிசேகம் செய்து திருநீறு, சந்தனம் பூசி, பூமாலை சூட்டி பூசையில் ஆசீர்வாதத்திற்காக வைக்கப்படும். கால் நாட்டுவதனால் நாட்டுவதற்குரிய கால் வேம்பு மரத்தில் எடுத்து அதுவும் திருநீறு சந்தனம் பூசி பூமாலை சூட்டி பூசையில் வைக்கப்படும். இதன் பின் இவற்றிற்காக வெட்டப்பட்ட குழியினுள் பசுப்பால் வார்க்கப்படும். அதன் பின் கோயில் மண், நாற்சந்தி மண், யானைக்கோட்டு மண், எருதுக்கொம்பு மண், நன்செய் மண், புன்செய் மண், ஆற்று மண், கடல் மண், குளத்து மண், புற்றுமண் முதலிய மண்களுள் ஒன்பது மண்களை அல்லது ஏழு வகையான மண்களைக்கலந்து குழியினுள் தூவுவர். கல் வைப்பதனால் இதன் மேல் சாந்து போடப்படும். இதைத் தொடர்ந்து நவ தானியங்கள், பஞ்ச லோகம், நவரெத்தினங்கள் என்பன போடப்பட்டு கல் வைக்கப்படும். கால் நடுவதனால் சாந்து போடுவதனைத் தவிர்த்து இங்கு குறித்த அனைத்துப் பொருட்களும் குழியினுள் இட்டு அதன்மேல் கால் நடுவர். இதனைத் தொடர்ந்து அதே இடத்தில் இருந்து அனைவரும் பொங்கல் உண்பதும் எஜமானன் தொழிலாளர்களிற்கு தட்சனை கொடுப்பதும் நிகழும்.

முகட்டு வளை வைக்கும் நிகழ்வு பொங்கல் செய்து விநாயகர் வழிபாட்டுடன் நடைபெறும். முகட்டு வளையை அபிசேகம் செய்து, திரு நீறு சந்தனம் பூசி, பூமாலை கட்டி முழுமையாக வெள்ளைத்துணியினால் கட்டி ஓடாவியினால் வளை ஏற்றப்படும். அச்சந்தர்ப்பத்தில் குரவையிடுதல், பட்டாசு கொழுத்துதல் என்பதும் மரபு. இறுதியில் வளையில் தேங்காய் உடைத்தும் பலகார வகை சொரிந்தும் நிகழ்வை நிறைவு செய்வர். வைக்கப்படும் நிலையை அபிசேகம் செய்து திருநீறு சந்தனம் பூசி, மாலை கட்டி வினாயகர் துதிபாடி நிலையை நிறுத்துவர் இங்கு நிலையை கடப்பது என்பது ஒரு முக்கிய நிகழ்வு. நிலையைக்கடக்கும் ஒவ்வொருவரும் தேங்காய் உடைத்து உட்சென்று வரவேண்டும்.

வீடு குடிபோதல் ஒரு அரங்கேற்றம் போன்றது. தற்போது ஆரிய மயமாக்கத்தால் ஐயரைக் கொண்டு பல கிரியைகள் இங்கு செய்யப்படுகின்றன. விநாயகர் ஓமம், கிராமசாந்தி, கிரகசாந்தி, வாத்ம சாந்தி என பல சாந்திகளும் கிரியைகளும் இதில் இடம் பெறும். பண்டய மட்டக்களப்பு மரபில் இத்தகய சாந்திகளும் கிரியைகளுக்கும் இடமிருக்கவில்லை. விநாயகரிற்கு பொங்கல் செய்து இந் நிகழ்வு ஆரம்பிக்கப்படும்.

வீடு குடிபுகும் போது வீட்டின் சொந்தக்காரர், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும், இணைந்து கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்களை வீட்டினுள் எடுத்துச் செல்வர்.



அவை குத்து விளக்கு, நிறைகுடம், வட்டாமடை, வினாயகர்படம், கண்ணாடி, மங்களப்பேளை, நெற்கடகம், அரிசிப்பெட்டி, சோற்றுப்பானை, பாய், சுளகு, சுண்ணாம்புப்பானை முதலியனவாகும். இதில் முக்கிய நிகழ்வு வீட்டுள் பால் காய்ச்சி பொங்கல் வழிந்ததும் அனைவரிற்கும் பரிமாறுவதாகும். இதைத் தொடர்ந்து விருந்தாளிகள் அனைவரிற்கும் அன்னபோசனம் வழங்கப்படும்.

வீடு குடிபுகுந்த நாளில் இருந்து விளக்கு அணையாது பாதுகாக்கப்படும் முன்பு நாற்பது நாட்களிற்கு மேல் ஒரு மண்டலகாலம் விளக்கை அணையாது வைத்திருப்பர். தற்போது அரை மண்டலகாலம் அல்லது கால் மண்டலகாலம் விளக்கை அணையாது வைத்திருக்கின்றனர். இவ் விளக்கை அணைப்பது வீடு குடிபுகுதலின் இறுதி நிகழ்வாகும். இந் நிகழ்விற்கு பெரும்பாலும் வெளியார் அழைக்கப்படுவதில்லை இது வீட்டின் சொந்தக்காரர் பொங்கல் வழிபாடு செய்து நிறைவேற்றும் நிகழ்வு எனலாம். சில வேளை குடிபுகுவதற்குச் சடங்குகளை செய்த ஐயர் இதற்கு அழைக்கப்படுவதும் உண்டு.

இறை வழிபாடும் சமய ஆச்சாரங்களைப் பேணுவதும்.

இந்துக்கள் இறைவனை பூரணமாக நம்புபவர்கள் அவனின்றி ஓரணுவும் அசையாது என்பது இவர்களது உறுதி. இதனால் தம் வாழ்வோடு தொடர்புடைய எல்லாவற்றையும் சமயமயப்படுத்துவதிலும், இறைமயப்படுத்துவதிலும் இவர்கள் பெரிதும் திருப்தியடைபவர்கள் இவ்வகையில் மட்டக்களப்பு இந்துக்களும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தவர்கள் இங்கு இரண்டறை வீடு இருந்தால் இதில் ஓரறையை சுவாமி அறையென ஒதுக்கிவிடுவார்கள். இச்சாமியறைக்குக் கொடுக்க வேண்டிய எல்லா மரியாதைகளும் எஞ்சிய ஓர் அறைக்குள்ளேயே குடும்ப வாழ்க்கையை ஒதுக்கிக் கொள்வர். மூன்றறை வீடாக இருந்தால் நடு அறையும் இரண்டறை வீடாக இருந்தால் வலது பக்க அறையும், சுவாமி அறையாக இருக்கும் இவ்வறை சுவர்களில் தெய்வங்களின் படமும் மாட்டப்பட்டிருக்கும் இதனை விட பல வீடுகளில் சுவாமியறைக்குள் நேராக வைரவர் பந்தலும் அமைந்திருக்கும் இவ் வைரவர் பந்தலில் சூலம் வைக்கப்பட்டிருக்கும். இவ் வைரவர் பந்தலினை இன்றும் காணலாம். மற்றய மனிதரின் சூனியம் துட்ட பிசாசுகளின் தீமை இவற்றிலெல்லாம் இருந்து காப்பாற்ற வைரவர் வழிபாடு நல்லது என்பது நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் காலைக்கடமைகளை முடித்த பின் சுவாமியறையில் விளக்கேற்றி சுவாமி படங்களிற்கு பூ வைப்பர். மாலையிலும் சுவாமிபடங்களிற்கு விழக்கேற்றத்தவறுவதில்லை.
வைரவர் பந்தலில் ஒவ்வொரு நாளும் அல்லது வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் விழக்கேற்றி வழிபாடு செய்வர். குடும்ப உறுப்பினர்கள் காலையும் மாலையும் திருநீறு தரிக்க வேண்டும் என்பது பொது நியதி. வெள்ளிக்கிழமை சிறப்பு வழிபாட்டுக்குரிய நாளாகக் கொள்ளப்படும். விரத நாட்களாகிய சிவராத்திரி, சித்திரை, ஆவணி, ஞாயிறு, புரட்டாதி சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை திங்கள், கந்த சஷ்டி, விநாயகர் சஷ்டி எல்லாம் புனித நாட்களாக கொள்ளப்படும். பல வீடுகளில் கார்த்திகை மார்கழி மாதங்களைப் பரிசுத்த நாட்களாகக் கொள்வர் ஊரக் கோயிலில் வருடாந்த உட்சவம் அல்லது சடங்கு நடைபெறும்.
மேலும் தைப்பொங்கல், புதிரெடுத்தல், புதிருண்ணல், சித்திரை வருடப்பிறப்பு, மாரியம்மன் சக்கரை அமுது கொடுத்தல், ஆடிப்பூரணை அமுது, பிதிரக்கடன், நவராத்திரி, கார்த்திகை, முதலிய நாட்களும் இங்குள்ள இந்துக்களின் வீட்டில் விசேட பூஜை வழிபாடு நடைபெறும் நாட்களாகும்.

தைப்பொங்கல்

இப்பண்டிகை தமிழ்ப்பண்டிகை எனப்போற்றப் படுவது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வாழும் எல்லாத் தமிழர் மத்தியிலும் இப்பண்டிகை பெரிதும் மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. மட்டக்களப்புப் பண்பாட்டில் தைப்பொங்கலிற்கு அடுத்தநாள், மாட்டுப் பொங்கல் நாளாகக் கொள்ளப்படுவதில்லை.



தைப் பூசத்தினமே இங்கு மாட்டுப் பொங்கல் தினமாக பட்டியில் பொங்கல் செய்து கொண்டாடப்படுகின்றது. மேலும் மட்டக்களப்புப் பொங்கல் மற்றய இடங்களினின்று சற்று வித்தியாசமாகக் காணலாம். இங்கு பானையில் முற்றிலும் பாலைமாத்திரம் வைத்து அப்பால் பொங்கியவுடன் அரிசிபோட்டு பொங்குவர். இங்கு தைப்பொங்கல் நாளே அறுவடை ஆரம்ப நாளாக இருப்பதனால் விவசாயிகளிடையே பணப்புழக்கம் மிகக்குறைவு. எனவே இப் புத்தாண்டைக் கொண்டாடும் நிலை எல்லோரிற்கும் கிடைப்பதில்லை. எனவே புத்தாடை எடுத்து கொண்டாடும் வாய்ப்பு எல்லோரிற்கும் கிடைப்பதில்லை. இருந்த போதிலும் ஏழை பணக்காரர் பேதமின்றி எல்லா வீடுகளிலும் அற்புதமாக பொங்கல் செய்து குடும்பத்துடன் உண்டு மகிழ்வர். மேலும் புதியஉற்பத்திகளாகிய கிழங்கு வகை மற்றும் சோளம் முதலிய தானியங்களும் அன்றய நாளில் சூரியனிற்கு படையல் செய்யப்படுகின்றது.

புதிரெடுத்தல்

வயல் விளைந்த பின் நல்லதொரு முகூர்த்தம் குறித்தும் புதிரெடுத்தல் நடைபெறும் இது சில இடங்களில் ஊர்க்கோயில்களில் புதிர் கொடுக்கும் முகூர்த்தமாக இருக்கும். வயலில் சென்று கதிர் பிடுங்கிக் கைபிடியாகக் கொண்டு வந்து வளவின் கடப்பில் கட்டித்தொங்கவிடுவர். பின் சுவாமியறையில் நிறைகுடம், மடைவைத்து வழிபாடு செய்து நிகழ்வு தொடங்கும். பின் புதிர் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் பெட்டியினுள் பழைய நெல்லை நிறைத்து அதன் மேல் வெற்றிலை, பழம், பாக்கு, நவதானியங்கள், பஞ்சலோகங்கள், பணம் முதலியன வைத்து வெள்ளத்துணியினால் மூடி, சுவாமி அறையின் முன்பக்க வாசலின் ஓர் இடத்தில் வெள்ளைச்சீலை விரித்து அதன்மேல் புதிர் எடுக்கும் பெட்டி கொண்டு வைக்கப்படும். இப் பெட்டி புதியதை வரவேற்பதற்காக மங்களகரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இதன் பின் தலை வாசலின் வெளியே கட்டித்தொங்கவிடப்பட்டிருக்கும். கதிர்ப்பிடியை தலைப்பாகை கட்டிய வீட்டுத் தலைவரால் தாம்பாளத்தில் வைத்து வெள்ளைத்துணியால் மூடி புதிரெடுக்கும் பெட்டி உள்ள இடத்திற்கு கொண்டுவரப்படும். பின் புதிரெடுக்கும் பெட்டியினுள் பெரிய கதிர்ப்பிடி வைக்கப்பட்டு அதனைத் தலையில் வைத்து சுவாமியறையினுள் கொண்டு செல்வர். மற்றய அறைகளிற்கும் உள்ளதற்கு தக்கபடி கதிர்கள் கொண்டு வைக்கப்படும் அதன்பின் பூசை செய்து, தேவார பாராயனம் செய்வதுடன் நிகழ்வு நிறைவு பெறும்.

புதிர் உண்ணுதல்

புதிர் எடுத்து பின் வயலில் புதிர் வெட்டி அடித்து தேவைக்குத் தக்கபடி நெல் எடுக்கப்படும். அந் நெல் வீட்டிற்கு கொண்டு வரப்பட்டதும் ஒரு பகுதி பொங்கலிற்காக பச்சையாகவும், மறு பகுதி சோற்றுக்காக அவித்துக் காயவைத்துக் குற்றி அரிசி எடுக்கப்படும். பின் குறித்த முகூர்த்த வேளையில் புதிந்துன்ன பொங்கல் மிக சுவையாகச் செய்யப்படும். சுவாமியறையில் விளக்கு நிறைகுடம் வைத்து விநாயகர் வழிபாடு செய்து, பொங்கல் படையல் செய்யப்படும். பின்னர் எல்லோரையும் சுவாமி அறையினுள் அமரச் செய்து

வீட்டுத் தலைவரோ அன்றி தலைவியோ எல்லோரிற்கும் புதிரை எடுத்துக் கொடுக்க, பின்னர் எல்லோரும் உண்டு மகிழ்வர்.

சித்திரைப் புத்தாண்டு.


மட்டக்களப்பு மக்கள் சித்திரைப் புத்தாண்டிற்கு அதி முக்கிய இடம் கொடுத்துக் கொண்டாடி வருகின்றனர். தீபாவளி மட்டக்களப்பில் அவ்வளவாகக் கொண்டாடப்படுவதில்லை, தைப்பொங்கல் கொண்டாடப்பட்டாலும் புத்தாடை தரித்துக் கொண்டாடப்படுவதில்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக சித்திரைப்புத்தாண்டு கொண்டாடப்படுவதற்கு பொருளாதார நிலையே முக்கிய காரணம் எனலாம். மாசி பங்குனி மாதங்களிலே பெரும்போக அறுவடை முடித்து, நெல்லைச் சந்தைப்படுத்தி ஓய்வெடுத்து ஆறுதலாக இருக்கும் காலத்தில் சித்திரைப்புத்தாண்டு வந்து சேருகின்றது. இதனால் பணத்தாலும் ஓய்வாலும் இக் கொண்டாட்டம் வெகு சிறப்புப் பெறுவதாயிற்று. மேலும் சித்திரைப்புத்தாண்டை தொடர்ந்து பல கலைகளும் மட்டக்களப்பில் வளர்ந்து வந்தமையும் அவதானிக்கத்தக்கது.

ஆடிப்பூரணை அமுது.

இது கதிர்காமத் தீர்த்தத் தினத்தன்று மட்டக்களப்பு வீடுகளில் செய்யப்படுகின்ற முருக வழிபாட்டுடன் தொடர்புடைய வழிபாட்டு நிகழ்வாகும். இது புரட்டாதி மாதத்தில் இடம்பெறும் வழிபாடு எனலாம். இங்குள்ள மக்கள் கதிர்காமத்தை சுவாமியின் ஊர் என்று போற்றி மதிப்பர். இதனால் கதிர்கா யாத்திரை செய்வது பெரிய ஆத்மீக பலன் தரும் நிகழ்வு எனக் கருதப்பட்டு வந்தது.

பிதிர் வழிபாடு

இந்துக்களின் வீட்டு வழிபாட்டில் குறிப்பிடத்தக்கதொன்று பிதிர் வழிபாடு. மற்றய இடங்களில் வாழும் இந்துக்களிடம் காணப்படும் பிதிர் வழிபாட்டில் இருந்து மட்டக்களப்பு இந்துக்களின் பாரம்பரிய பிதிர் வழிபாடு வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. இங்கு பிதிர்களை "உத்தியாட்கள்" என்றும் பிதிர் வழிபாட்டை "உத்தியாட்களிற்குச் செய்தல்" என்றும் கூறுவர், பிதிர்களை உத்தியாட்கள் என்று கூறும் வழக்காறு மட்டக்களப்பு ஆதிக்குடிகளாகிய வேடர்களிடமும் இருந்து வந்தமையை அறிய முடிகின்றது.



மொரட்டுவையிலிருந்து

# மாதம் ஒரு பீடம்!!!



இம்மாதம் இயந்திரவியல் பீடம்!

பத்து உட்பிரிவுகளின் உள்ளடக்கம் மொரட்டுவையின் இயந்திரவியல் பீடம். இவை அனைத்துமே Semester எனும் 16 வாரத் தவணை மதிப்பீட்டு-முறைமையை பொது வாகக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான 8 "Semester" கள், தவணைகள் (terms), விடுமுறைகள் அடங்கலாக ஏறத்தாள நான்கு வருடங்களை இப் பீடம் வேண்டுகிறது.

பல்கலைக்கழக அறிமுக காலத்தில் ஆங்கில த்தையும் இயந்திரவியலிலான ஈடுபாட்டையும் மேம்படுத்த ஏறத்தாள ஒன்பது வாரங்களுக்கு Pre-academic term எனும் முன்னோடி தவணைப் பருவம். அடுத்த படியாக வரும் முதலாவது ளநஅநளவநச முடிவுகளே துறைக-ளின் தெரிவைத் தனித்து நின்று தீர்மானிக்கும். இத் தெரிவுகள் முறையே பெறுபேற்றிலும் விருப்பத்தின் அடிப்படையிலுமே தங்கியிருப் பதால் அம் மூன்றரை மாதங்களும் ஒரு mini Advanced Level போல் ஆர்ப்பாட்டமாய் நகரும்.

பத்து உட்பிரிவுகளுள் முதலில் விபரணை கொள்ளும் ஏழும் தெரிவுப் பிரிவுகள். இவ் விபரணை ஒழுங்கு மொரட்டுவையின் சமகால பொதுவான தெரிவு வரிசையைச் சுட்டி நிற்பினும் இவ் வரிசையானது துறைகளின் சிறப்பையோ இலகுத்தன்மையையோ, வேலை வாய்ப்பி னையோ குறிப்பிடுவன அல்ல. காலத்தோடு மாறக் கூடியதும் மாற வேண்டியதுமான வரிசை இதுவென்பதால் இவ் வொழுங்கை மாத்திரம் வைத்து வாசகர்கள் இத் துறைகள் சார்ந்த எந்த முடிவுக்கும் வருவது உசிதமல்ல.

சதுர அடைப்பினுள் இடப் பட்டிருக்கும் எண்கள், குறித்த துறையின் வருடாந்த அதியுயர் மாணவர் அனுமதி எண்ணிக் கையை காட்டுகின்றன. துறைகளின் உட்பிரிவுகள் பெரும்பாலும் 3வது வருடத்தின் போதே பிரிக்கப்படும்.

1. இலத்திரனியலும் தொலைத் தொடர்பாடலும்
   (Electronics and Telecommunication Engineering) [100]

பெயரிலே கோர்த்திருக்கும் இரு கூறுகளையும் பிரதான பிரிவுகளாய் கொண்டது. அவை இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல். திறனை உயர்த்திய வண்ணம் உபகரணங்களின் உருவைச் சிறுப்பிக்கும் இக்கால இலத்திரனியலின் உபயோகமும் தொலைத்தொடர்பாடல் துறையின் தொடரும் வளர்ச்சியும்-வாய்ப்பும் இத் துறையின் கேள்வியையும் சுவாரசியத்தையும் தக்க வைத்திருக்கின்றன.

2. கணினி விஞ்ஞானமும் இயந்திரவியலும்
   (Computer Science and Engineering) [100]

வாய்ப்புகள் வரண்டு விடுமோ என வருந்த வேண்டிய அவசியமற்ற துறைதான் எனினும் பல்கி வரும் போட்டிகளும் தொடரும் மாற்றங்களும் இத் துறையிலான உழைப்பும் தேடலும் நான்கு வருடத்தினுள் அடைக்கப் படுவதற்கில்லை என்பதை உணர்த்துகின்றன. விரைவாகவும் இலகுவாகவும் கற்றுக் கொள்வதற்குரிய ஆற்றலை வளர்த்துக் கொள்வதுதான் இத் துறையில் கைகொடுக்கும்.

3. மின் இயந்திரவியல்
   (Electrical Engineering) [80]

மேற்கண்ட இரண்டு துறைகளினதும் பிரதான தோழன். Generation (மின் பிறப்பாக்கம்), Transmission (தொலை-மாற்றல்), Distribution (விநியோகம்) ஆகிய பிரதான துறைகளில் கல்வியையும் வேலை வாய்ப்புக்களையும் கொண்டது. ஏனோ தமிழ் மாணவர்களை கவரத் தவறுகிறது!!!

4. குடிசார் இயந்திரவியல்
   (Civil Engineering) [125]

நீண்ட வரலாறு கொண்டதும் தன் கட்டுமானங்களைப் போலவே நிமிர்ந்ததுமான துறை! வேலை வாய்ப்பினை பறைசாற்றும், உள்வாங்கும் மாணவர் தொகை!! அதிக உட்பிரிவுகளை உள்ளடக்கியிருப்பதுவும் இத் துறைக்கு நம்பிக்கையளிக்கிறது. Structural, Geo-technical, Irriga-tion, Environmental என்பவை அவற்றுள் முக்கியமான சில.

5. பொறிமுறை இயந்திரவியல்
(Mechanical Engineering) [75]

மேற் கண்ட துறைகளுடன் ஒப்பிடுகையில் சுவாரசியத்தை புதிய கோணத்தில் தேடும் சிறந்ததொரு துறையிது. Auto mobile, Robotics, Manufacturing என்றவாறான பெயரிலேயே பொருள் துலங்கும் பிரதான பிரிவுகள் கொண்டது. எந்த ஒரு நிறுவனமும் சாதனமும் இத் துறையிடம் இருந்து தூர விலகிட முடியாது!

6. இரசாயனமும் செயன்முறையும் இயந்திரவியல்
(Chemical and Process Engineering) [80]

பரந்த இந்தத் துறை மனிதனுக்கும் இயற்கைக்கும் நெருக்கமாய் வருகிறது. Energy & Environment, Food & Biology, Polymer-Petrolium என்பன இத் துறையின் சில பாகங்கள். இலத்திரனியல், பொறிமுறை, மூலப் பொருள் இயந்திரவியல்களுடன் தொடர்புடைய துறையென்பதால் மேற்படிப்பை தொடரும் தெரிவுகள் அதிகரிக்கின்றன.

7. மூலப் பொருட்கள் இயந்திரவியல்
(Material Science and Engineering) [50]

அணுவிலிருந்து அலகுவதால் ஏறத்தாள அனைத்து துறைகளையும் தொட்டுவிடுகிறது. Polymer, Metal என்பதான இரு பிரிவு கொண்டது. குடிசார் இயந்திரவியலுடன் கை கோர்த்தும் Ceramic, Polymer நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளை அள்ளிக் கொள்கிறது. இங்கும் மேற்படிப்பைத் தொடரும் தெரிவுகள் அதிகம்.

8. நிலவளங்கள் இயந்திரவியல்
( Earth Resource Engineering) [50]

இத் துறை இயற்கையைத் துருவிப் பார்க்கிறது. கனிய வளமறுப்பு(Mining), நில வளங்கள் (Earth Resource) எனும் இரு முக்கிய பிரிவுகள் கொண்டது. குடிசார் இயந்திரவியலுடன் இணைந்த வேலை வாய்ப்புக்களுடன் சுரங்கக் கைத்தொழில், கனிய அகழ்வு, குவாரி(Quary) போன்ற துறைகளிலும் வாய்ப்புக் கொண்டது.

9. புடவை மற்றும் துணி இயந்திரவியல்
(Textile Engineering ) [ 50]

இந்த இயந்திரவியல் பிரிவானது மூலப்பொருளான Fibre ஐ கொண்டு Spinning, Weaving, Knitting போன்ற பொறியியல் சார் செயன்முறைகளூடாக தொழில்நுட்பம் (Technical textile) மற்றும் தொழில்நுட்பம் தவிர்ந்த (Non technical textile ) துணி உற்பத்தி, ஆடை உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியது

10. போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவம்
(Transport and Logistics Management) [50 ]

பெயரினைப்போன்றே விமானம் துறைமுகம் மற்றும் தரை வழிகலூடான விநியோகச்சங்கிலி மற்றும் போக்குவரத்துக்கு செயற்பாடுகளை முகாமை செய்வது தொடர்பான கற்கைநெறி.

**நண்பர்களுக்கு வணக்கம்,**

பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களையும் கல்வி ஆர்வலர்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் சஞ்சிகை உலகிற்குள் நுழைந்திருக்கும் எம் வணக்கம் சஞ்சிகையின் முதலாவது இதழுக்கு மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் அறிஞர்கள், கலைஞர்கள் என பலரிடமிருந்தும் கிடைத்த பாராட்டுதல்களும் விமர்சனங்களும் எம்மை மேலும் உற்சாகமடையச் செய்துள்ளது.

இவ்வாறானதொரு முயற்சியை அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் மாணவர்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்ற அவா சமூகத்தில் புதைந்திருந்ததை எமது முதல் வணக்கத்துக்கு நாடு முழுவதும் கிடைத்த வரவேற்பு உறுதி செய்தது. எனினும் கடந்த இதழில் ஏற்பட்ட பிழைகளுக்கும் பக்க வடிவமைப்பில் இடம்பெற்ற தவறுகளுக்கும் "வணக்கம்" குழாம் வாசகர்களிடம் மன்னிப்புக்கோருகின்றது. சென்ற இதழை விடவும் சிறப்படைந்திருக்கும் இந்த இதழைப் போலவே இனிவரும் இதழ்களுக்கும் எமது அயராத உழைப்பு உயிரூட்டி வணக்கத்தை ஒரு ஆரோக்கியமான சஞ்சிகையாக்கும் என்பது நிச்சயம்.

தமிழ்க்கல்வி உலகின் வணக்கம் சஞ்சிகையோடு இணைந்து தரம்வாய்ந்த அதேநேரம் காலத்திற்கு அவசியமான ஆக்கங்களை வாசகர்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காக எம்முடன் கை கோர்க்குமாறு பல்கலைக்கழக நண்பர்கள் பாடசாலைத் தம்பி தங்கையர், கல்வி அபிவிருத்தி சார் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பொழுது போக்கினூடாக கல்வி என்ற நோக்கத்துடன் முன்வரும் எவரும் எம்முடன் தொடர்பு கொண்டு வணக்கம் சஞ்சிகையை அழகூட்டும் பணியில் இணைந்து கொள்ளலாம்.


அடுத்த இதழுக்கு ஆக்கங்கள் அனுப்ப விரும்பும் நண்பர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ம் திகதிக்கு (25.04.2011) முன்னதாக எமக்கு சேரும் வகையில் அனுப்பி வைக்கவும் ஆலோசனைகளையும் ஆக்கங்களையும் எமக்கு அனுப்புவதற்கும் உங்கள் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவும் உங்களுக்கு வசதியான தொடர்பாடல் முறையினூடாக தொடர்பு கொள்ளலாம்.


முகவரி : 1048, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
தொலைபேசி : 0773405068 (ஆசிரியர்)
அலுவலகம் : 021-7200684
மின்னஞ்சல் முகவரி : vanakkamnet@gmail.com

## அன்பின் கண்ணாடி


தெரிந்தே நிகழவிருக்கும் பிரிவை
ஒரு மழைத்துளியாக்கி உன்னிடம் கொண்டுவருகிறேன்.
கடலடியில் நகரும் ஆழ்ந்த மௌனத்துடன்
என்னை எதிர்கொள்கிறாய்.
அறுந்து விழுகின்ற சொற்களுடன்
தடுமாறும் என் கரம் பற்றுகிறாய்.
உனக்கென நான் கொணர்ந்த
மழைத்துளி கடலாகி நம்மைச் சூழ்கிறது.
தெரிந்தே தவற விடுகிறோம்
நம் மகத்தான அன்பின்
கண்ணாடியை.
உனக்கும் எனக்கும் இடையில்
மெல்ல எழுகிறது
காலத்தின் கறுப்புச்சுவர்.

- நிலா ரசிகன்

Gather Page















www.gatherpage.com

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195